விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 23 திங்கட்கிழமை (08.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 201

'அரசாங்கமே உடனே வெளியேறு'

## களுத்துறையில் நேற்று ஜே.வி.பி பெரும் பேரணி



(களுத்துறை)

சர்வதேசத்துடனான ஒப்பந்தங்கள் மூலம் நாட்டின் சுயாதீனத் தன்மையையும் பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் ரணில் - மைத்திரி

▷23

வடமராட்சி பகுதியிலுள்ள வீடொன்றில்

## மயக்கமருந்து விசிறி 80 பவுண் நகை, பெருமளவு பணம் கொள்ளை

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றில் 80 பவுண் தங்க நகைகள், வெளிநாட்டுப் பணம் மற்றும் இலங்கை பணம் என்பன கொள்ளையர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

துன்னாலை, வடக்கு போதராமடத்தில் உள்ள வீடு ஒன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் வெளிநாட்டில் இருந்து வருகை

▷23

காணி வழங்குவதை

## எவராலும் நிறுத்த முடியாது – ரணில்

(அம்பாறை)

இலங்கை மக்களுக்கு சொந்தமாக காணி உரிமைகளை வழங்குவதை தடுக்க எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என பிரதமர்

▷23

## விசேட கட்சி தலைவர்கள் கூட்டம்
இன்று கூடுகிறது

(கொழும்பு)

காணி தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டம் குறித்து கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

விசேட கட்சி தலை

▷23

மதுபோதையில் சாரத்தியம்

## 433 சாரதிகள் நேற்று கைது

(கொழும்பு)

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியினுள் மதுபோதையில் வாகனம் செலுத்திய 433 சாரதிகள் கைது

▷23

# இலங்கை சிங்களவர்களின் நாடு
# சிங்கள அரசையே அமைப்போம்

## கண்டி மாநாட்டில் ஞானசார தேரர் முழக்கம்



**(கண்டி)**

**இலங்கை சிங்களவர்களின் நாடு. நாங்கள் சிங்கள அரசையே அமைப்போம். தமிழர்கள் இதனால் கோபித்துக் கொள்ள வேண்டாம் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் அத்தே கலாகொட ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று பிற்பகல் நடந்த பிக்குக்ளின் மாநாட்டிலேயே அவர் இந்த இனவாதக் கருத்தை வெளியிட்டார்.

சிங்களவர்கள் சிங்களவர்களாக இருக்கவைக்க எமக்கு அரசியல் அதிகாரம் வேண்டும். அதற்காக பாடுபட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

மதரீதியாக முஸ்லிம்கள் எவ்வளவு மாறியிருக்கிறார்கள் என்பதை அண்மைய தாக்குதல்களில் அறிந்து

▷23

## பதவிக் காலத்தை நீடித்தால் மைத்திரிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை
ரணில் – மகிந்த உடன்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஐந்தாண்டு பதவிக்காலம் உத்தியோகபூர்வமாக எப்பொழுது முடிவடைகிறது என்ற அபிப்பிராயத்தை உயர்நீதிமன்றத்திடம் ஜனாதிபதி விரைவில் கோரவுள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளா, ஆறு ஆண்டுகளா என்ற சர்ச்சை தோன்றிய போது, ஏற்கனவே உயர் நீதிமன்றத்தை ஜனாதி

▷23

## கோத்தாவை சிறையில் அடைத்தாலும் அவர் தேர்தலில் வெற்றி பெறுவார்
உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என பிவித்துரு ஹெல உறுமய யோசனை முன்வைக்கும். கோத்தபாய ராஜபக்ஷ சிறையில் அடைக்கப்பட்டாலும் அவர் சிறையில் இருக்கும் போது, அவருக்காக தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளப் போவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்

▷23

இந்தோனேசியாவில்

## சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தோனேசியாவின்

▷23

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
➔ ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
➔ பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
➔ அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை
Harikanan Express
20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
கரிகணன்
021 222 2737
வடக்கின் அச்சகதாரர்

## வீடு வாடகைக்கு

யாழ்.திருநெல்வேலி சந்தியிலிருந்து 500M தொலைவில் பலாலி வீதியில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(C-6904)

தொடர்புகளுக்கு

**076 459 4800**



## BCHS

நீங்கள் Canada வில் கல்வி கற்க ஆர்வமுடையவரா?

Canada student visa

No 15 2/1, Off Stanley road, Sirambiyadi lane, Jaffna

Call: 0212224550 / 0761380212

(C-6903)


# காணாமல் போனோர் அலுவலகத்துக்கு சபாநாயகர் குழு இன்று விஜயம்

(கொழும்பு)

காணமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு இன்று திங்கட்கிழமை சபாநாயகர் கருஜயசூரிய தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று செல்லவுள்ளது.

காணமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைமையகம் சிராவஸ்தி மாளிகையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இயங்கி வருகின்றது. இந்நிலையில் கடந்த முதலாம் திகதி தினேஸ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன தலைமையிலான குழுவொன்று மேற்பார்வை விஜயமொன்றைச் செய்திருந்தது.

இவ்வாறான நிலையிலேயே தற்போது சபாநாயகர் தலைமையிலான குழுவினர் அங்கு செல்லவுள்ளனர். சிராவஸ்தி மாளிகையானது பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகமாகவும், ஓய்வு விடுதியாகவும் இருந்தது. பின்னர், மேல்மாகாண முதலமைச்சரின் அலுவலகமும் அங்கு செயற்பட்டு வந்திருந்தது.

அதன்பின்னரே காணமல் போனோர் பற்றிய அலுவலகம் அங்கு இயங்க ஆரம்பித்துள்ளது.

குறித்த மாளிகையானது, வரலாற்றுப் பாரம்பரிய சொத்தாக பயன்படுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ள நிலையில் தற்போது அம் மாளிகையின் நிலைமைகள் மற்றும் பாரிமரிப்பு விடயங்களை நேரில் பார்வை இடுவதற்காக சபாநாயகர் தலைமையிலான குழு அங்கு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


## யா/ஏழாலை மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம்

மேற்படி பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழா சம்பந்தமான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 14.07.2019 (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 4.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். **பழைய மாணவர்சங்கம்**

**ஏழாலை ம.வி. ஏழாலை**

(C-6905)


## சுற்று நிருபத்தை எதிர்கொள்ள

# பழைய மாணவர் சங்கங்கள் நேற்று கூடி ஆராய்ந்தன

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்கள் தொடர்பாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரினால் 23.05.2019 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தினால் பழைய மாணவர் சங்கங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்ளும் வழிவகைகளை ஆராயவும் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடவும் வடமாகாணத்தில் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றையதினம் ஒன்றுகூடினர்.

பழைய மாணவர் சங்கங்களின் தனித்துவத்தினையும், சுயாதீனமாக இயங்கும் தன்மையையும் உறுதிப் படுத்துவதற்கும், மேற்படி சுற்றுநிருபம் போன்ற சவால்களை எதிர்கொள் வதற்கும் என வடமாகாணம் தழு விய ரீதியில் பழைய மாணவர் சங் கங்களின் ஒன்றியம் உருவாக்கப் பட்டது.

மேலும் அக்கலந்துரையாடலில் மேற்படிச் சுற்றுநிருபத்தனால் சங்கங்கள் சுயாதீனமாக வங்கிக் கணக்குகளை கையாள்வதை வங்கிகள் தடுத்துள்ளமை வங்கிக்கும் சங்கங்களிற்கும் இடையிலான சட்ட ரீதியான இணக்கப்பாட்டிற்கு முரணாகவும் வழமையான நிதி நடைமுறைகளிற்கு மாறாகவும் அமைந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டதோடு இந் நிலைக்கு எதிராக வங்கிகளை சட்ட வல்லுநர்களின் உதவியோடு சட்டரீதியான கேள்விக்குள்ளாக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (3)

## விசுவமடு த.க.பாடசாலையின் ஸ்தாபகர் விசுவநாதர் காலமானார்



(யாழ்ப்பாணம்)

விசுவமடு தமிழ்க் கலவன் பாடசாலையின் ஸ்தாபகரும் அப் பாடசாலையின் முதல் அதிபருமாகிய சந்திரசேகரம் விசுவநாதர் நேற்றுக் காலமானார்.

அவருக்கு வயது 91. பருத்தித்துறை இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட விசுவநாதர், விசுவமடு குடியேற்றம் ஆரம்பிக்கப் பட்டபோது 1978ஆம் ஆண்டு விசுவமடு தமிழ்க் கலவன் பாடசாலையை ஆரம்பித்தார்.

இவரின் அளப்பெரும் கல்விப் பணியைக் கௌரவிக்கும் முகமாக விசுவமடு ஆரம்பப்பாடசாலைக்கு விசுவநாதர் ஆரம்பப்பாடசாலை என 2013 ஆம் ஆண்டு பெயர் சூட்டப்பட்டது.

விசுவமடுவில் இவரின் கல்விப்பணி சான்றாமை மிக்க மாணவர் அணியை உருவாக்கியது.

இவரின் பூதவுடல் இன்று காலை 10.00 மணியளவில் விசுவமடு மகா வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். (3)


## SAAMSON இன் மூன்றுமாத வார, வார இறுதி இலவச ஆங்கிலப்பயிற்சிநெறி

இளைஞர், யுவதிகள், 13 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள்,தொழில்புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்கவிரும்பும் அனைவரும் இணையமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.07.2019 சனிக்கிழமை

1. காலை 10.00 2. மதியம் 02.00

வார நாள் ( செவ்வாய், வியாழன் ) பிரிவுகள் 11.07.2019

1. காலை 8.30 2. காலை 10.30

பயிற்சிக்கட்டணம் | அனுமதி | சான்றிதழ் | முற்றிலும் இலவசம்

Modules கட்டணமாக ரூ 1000 மட்டுமே செலுத்துதல் வேண்டும்

இவ்வாறம் இணைவோருக்கு மட்டுமே இலவசப்பயிற்சி

SAAMSON Experts in English Training

403, வெலிங்டன் சந்தி, சன்மார்க்க மகா வித்தியாலயம் முன்பாக யாழ்நகர்,

077 621 4567

021 222 4282

(C-6907)


# அரசாங்கத்தை தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்

## லஷ்மன் யாப்பா தெரிவிப்பு

(கண்டி)

தற்போதைய அரசாங்கத்தை எதிர்காலத்தில் வரும் ஏதாவது ஒரு தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறை, திக்வெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் முதலில் புலனாய்வு பிரிவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் தபோதரன் தர்சன்



அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

**அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வட்டுக்கோட்டை தொகுதி.**

(C-6906)



## 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணரங்கு 11.02.1924

**கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து**

மரணத்தை வென்றீர்கள் எங்கள்
மனங்களை வென்றீர்கள்
இந்த மண்ணுக்கு கலை நீர் வார்த்து
விண்ணுக்கு விருந்தாய்ப் போனீர்கள்
உயரத்தில் நிற்கும் உங்களை உணர்கிறோம்
உரைக்கும் வார்த்தை உள்ளூறக் கலந்து
நெஞ்சில் உறுதியை வளர்க்கும் ஐயா

விண்ணரங்கு 08.07.1989

'சாரங்கா' காங்கேசன்துறை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப்பேரன், பெறாமக்கள்.

(9505)



## வேலை வாய்ப்பு

Are You Looking For Full Time Job? or Part Time Job?

இதோ எமது The Inner Circl Company இல் O/L தகைமையுடன் இணைந்து நிரந்தரமாக பணிபுரிய ஓர் அரிய சந்தர்ப்பம்.

- Super Visor (மேற்பார்வையாளர்)
- Ass Manager (உதவி முகாமையாளர்)
- Manager (முகாமையாளர்)
- Store Keeper (களஞ்சியப் படுத்துனர்)
- Marketting trainers (சந்தைப் படுத்தல் பயிற்சியாளர்)

போன்ற பல்வேறுபட்ட பதவிகளுக்கு துடிப்பும் ஆர்வமும் உள்ளவராயின் இன்றே எம்முடன் இணையுங்கள்.

அடிப்படைச்சம்பளம் 24,500/= தொடக்கம் 45,000/= + EPF + ETF

தங்குமிடம் உணவு வசதிகள் இலவசம். இன்றே அழையுங்கள்.

076 770 7759, 077 999 4807

(9507)





சரவணை - தேவபுரம்

ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி திருக்கோயில்

கதிர்காம மஹோற்சவ கால விழா

சிவாச்சாரியார் திலகம் சிவஸ்ரீ சிவகுமார குருக்கள் தலைமையில் குறித்த நேரங்களில் சிறப்புற அமைய பிரார்த்திக்கின்றோம்.

கோயில்களின் தர்மகர்த்தா சபை, ஊர்காவற்றுறை கோவில்பற்று

(9506)

# அரசுக்கெதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## 10,11 இல் விவாதம்

(கொழும்பு)

ஏப்ரல் 21ஆம் திகதி இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலைத் தடுப்பதற்கும், நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கும் தவறியமை மற்றும் தற்கொலை தாக்குதல்கள் இடம்பெற்று 21 நாட்களின் பின்னர் இனமொன்றை குறிவைத்து நடத்தப்பட்ட இன ரீதியான வன்முறைகளைத் தடுக்கத் தவறியமை ஆகிய காரணங்களை முன்வைத்து மக்கள் விடுதலை முன்னணி அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகொள்வது தொடர்பில் ஆளும் தரப்பினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் குறித்த பிரேரணைக்கு ஆதரவளித்து ஐ.தே.முன்னணி தலைமையிலான ஆட்சியை கவிழ்ப்பதற்குரிய முனைப்புக்களை எதிர்த்தரப்பினரும் முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பாக அரசியல் தரப்புக்கள் சில தீர்மானங்களை எடுத்துள்ள நிலையில் மேலும் சில தரப்புக்கள் அடுத்துவரும் தினங்களில் இறுதி முடிவுகளை எட்டவுள்ளதாக அறிவித்துள்ளன.

ஐ.தே.க. சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில், அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றோம். அதனை நிச்சயமாக தோல்வியடைச் செய்வோம். அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டோம் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவிக்கையில்,

அடிப்படைவாத பயங்கரவாதிகளால் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று புலனாய்வுப் பிரிவினரும், சர்வதேச புலனாய்வுத் தரப்புக்களும் எச்சரித்திருந்தபோதும் அதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மக்கள் ஆணைபெற்ற ஆட்சியாளர்கள் நாட்டு மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நடந்தேறும் போது நாட்டின் பிரதான ஆட்சியாளர் நாட்டிலேயே இல்லை. இவ்வாறான நிலையில் தற்பொழுது நாட்டை ஆட்சி செய்பவர்களுக்குத் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்குத் தார்மீக உரிமை இல்லை.

இதனை மனதில் கொண்டு எமது பிரேரணைக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும். குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சியின் கிறிஸ்தவ உறுப்பினர்கள் சிந்தித்து செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

அரசாங்கம் பொறுப்புக்கூறலிலிருந்து விலகியமையை மையப்படுத்தி அரசுக்கு எதிராக கொண்டுவரப்படும் இந்தப் பிரேரணையை ஆதரவளிப்பது என்று எமது அணி தீர்மானித்துள்ளது என மகிந்த அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்ஸா தெரிவித்தார்.

அதேநேரம், அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு யார் அல்லது எந்த கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தாலும் எவ்வித கட்சி பாகுபாடுமின்றி நாம் அதற்கு ஆதரவு வழங்குவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவும் குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கத்துக்கு எதிரான பிரேரணையை நாம் ஆதரிக்கும் முடிவிலேயே இருக்கின்றோம்.

இருப்பினும் அடுத்து வரும் நாட்களில் எமது கட்சியின் தலைமையுடன் கலந்துரையாடி இறுதி முடிவினை அறிவிப்போம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அணியின் சார்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான, தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக அதன் உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதேநேரம், சமகால விடயங்களை கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமை பாராளுமன்றக்குழுவை கூட்டி கலந்துரையாடியே இறுதி முடிவினை எடுக்கும் என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அதேநேரம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் அடுத்து வரும் நாட்களிலேயே தீர்மானிக்கவுள்ளதாக தெரியவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-9)

# முஸ்லிம்களின் உதவி இல்லாமல் தமிழருக்கு தீர்வு இல்லை

## ஹரீஸ் எம்.பி.

ஒரு கையால் தட்டி சத்தம் வராது. இரு கைகளும் இணைந்து தட்டி ஓசை எழுப்ப வேண்டும். முஸ்லிம்களின் உதவி இல்லாமல் தமிழர்களின் தீர்வுத் திட்டங்கள் ஒருபோதும் நடக்காது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் சமுர்த்தி பயனாளிகளுக்கு உரித்து பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை சாய்ந்தமருது தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டில் பல நல்ல திட்டங்கள் எதிர்வரும் காலங்களில் வர இருக்கிறது. அதனைச் சரியாக பயன்படுத்தி எமது பிள்ளைகளை நன்றாக கல்விகற்க வைப்பதன் மூலம் நாம் அரேபிய நாடுகளுக்கு எமது பிள்ளைகளை தொழிலுக்கு அனுப்பவேண்டிய நிலைவராது.

சஹ்ரான் எனும் சிறிய குழுவினர் செய்த தாக்குதலின் பின்னராக அண்மைய காலங்களில் எமது மக்களின் மீது நடக்கும் அநீதிகள் மனவேதனையாக உள்ளது. ஹபாயா, ஹிஜாப் அணிவதில் எமது பெண்களுக்கு வந்த சிக்கலையும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் போராடி வெற்றி பெற்றோம்.

கண்டியில் எமது அமைச்சர்களில் ஒருவரான நிசாத்தையும் முஸ்லிம் ஆளுநர்களையும் குறிவைத்து அத்துரலிய தேரர் இருந்த உண்ணாவிரதம் மூன்று நாட்கள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அது நாட்டுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் நான் எல்லோரையும் ஒன்றுதிரட்டி 9 அமைச்சர்களையும் இராஜினாமா செய்ய வைத்து நாட்டை பாதுகாத்தோம்.

ஜனாதிபதித் தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ள இந்தக் காலகட்டத்தில் எமது இருப்புக்கு பாரிய சவால் இருக்கிறது.

எம்.எஸ். காரியப்பர், எம்.சி. அஹமத், ஏ.ஆர்.எம். மன்சூர், தலைவர் அஷ்ரப், போன்றவர்கள் கல்முனை மாவட்ட காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள் அடங்கிய முக்கிய நகரமாக மாற்றியமைத்தவர்கள். கல்முனையை செதுக்கியதில் முஸ்லிம்களின் பங்கு அளப்பரியது. இதனை அறியாமல் தமிழ், முஸ்லிம் உறவை சீரழித்து கல்முனையை கூறுபோட மூன்றாம் தரப்பின் உதவியுடன் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். வெளி மாவட்ட அரசியல் தலைவர்கள் இதனை வழிநடத்தி செல்கிறார்கள். அரசாங்கத்துக்கும், அரசியல் கட்சிகளின் தலைமைகளுக்கும் ஒரு செய்தியை கூறியுள்ளோம். கல்முனையை பிரிப்பதாக இருந்தால் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இருந்தது போல பிரியுங்கள். கிளிநொச்சி, யாழ், வவுனியா, மட்டக்களப்பு, போன்ற பல நகரங்கள் தமிழ் மக்களின் பிரதான நகரங்களாக இருக்கின்றன. ஆனால் கல்முனை மாநகரம் முஸ்லிம்களின் தாயகம். அதையாருக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது.

தமிழ் தலைமைகள் நியாயமில்லாமல் நடக்கிறார்கள். அவர்கள் இதன் பின்விளைவுகளை சிந்திக்க வேண்டும். யாழில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தழுதழுத்த குரலில் "தமிழர்களின் தீர்வு திட்டம் மழுங்கடிக்கப்படுகிறது, அரசாங்கம் ஏமாற்றுவதாக பேசினார்"

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயங்களை உணர்ந்து அவர்களுடன் கைகோர்க்க வேண்டிய உணர்வு முஸ்லிம்களுக்கு இருந்தது. எங்களின் நியாயத்தை மறுக்கும்போது எங்களின் பாணியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி வரும். ஒரு கையால் தட்டி சத்தம் வராது. இரு கைகளும் இணைந்து தட்டி ஓசை எழுப்ப வேண்டும். முஸ்லிம்களின் உதவி இல்லாமல் தமிழர்களின் தீர்வுத் திட்டங்கள் ஒருபோதும் நடக்காது எனமேலும் தெரிவித்தார். (7-9)

# நாட்டுக்கு பங்கம் ஏற்படுத்தும் எந்தவொரு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட முடியாது

## மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் சுயாதீனத்துக்கு சவாலான எந்தவொரு வெளிநாட்டு ஒப்பந்தத்திலும் தனது ஆட்சிக் காலத்தில் கைச்சாத்திட முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்துடன், நாட்டைக் காட்டிக்கொடுக்கும் சோபா, மிலேனியம், சலஞ் உள்ளிட்ட பல ஒப்பந்தங்கள் மற்றும் நாட்டுக்குப் பொருந்தாத காணிச் சட்டங்கள் தொடர்பில் சமூகத்தில் பல்வேறு தரப்புகள் கருத்துகளை முன்வைத்து வருவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அக்கருத்துகளின் தன்மை எவ்வாறாக அமைந்தாலும், நாட்டுக்கு பங்கம் ஏற்படுத்தும், அதேபோன்று நாட்டுக்கு பொருந்தாத எந்தவொரு ஒப்பந்தத்துக்கும் தான் உடன்படப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் பிபிலை பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற "நாட்டுக்காக ஒன்றிணைவோம்", மொனராகலை மாவட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-9)

# தெகிவளையில் இளைஞர்கள் கடத்தப்பட்டதை ஒப்புக் கொண்டார் அட்மிரல் கரன்னகொட



(கொழும்பு)

தெகிவளையில் 5 இளைஞர்கள் கடத்தப்பட்டு, கிழக்கு கடற்படை தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை, அறிந்திருந்தார் என்பதை, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.

கொழும்பு பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 பேர் குறித்து விசாரித்து வரும், குற்ற விசாரணைப் பிரிவு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் அளித்துள்ள 'பி' அறிக்கையிலேயே இந்த தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது விசாரணைகளின் போதே, தெகிவளையில் 5 இளைஞர்கள் கடத்தப்பட்டு, கிழக்கு கடற்படை தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை, அறிந்திருந்தார் என்பதை, அட்மிரல் வசந்த கரன்னகொட ஒப்புக்கொண்டார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், கடத்தப்பட்ட இளைஞர்களைப் பற்றி முதன்முதலில் 2009 மே 10ஆம் திகதி அறிவிக்கப்பட்ட போதும், கிழக்கு கடற்படைத் தலைமையகத்தில் இருந்த இளைஞர்களை விடுவிப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு, அட்மிரல் கரன்னகொட தவறிவிட்டார் என்றும் குற்ற விசாரணைப் பிரிவினர் கூறியுள்ளனர்.

அவர் ஐந்து இளைஞர்கள் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தகவல்கள் குறித்து, சரியாக கவனத்தில் எடுத்து, செயற்பட்டிருந்தால், அந்த இளைஞர்கள் மற்றும் பலவந்தமாக கடத்தப்பட்ட ஏனையவர்களையும் பாதுகாத்திருக்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர்கள் தொடர்பாக கடற்படைப் புலனாய்வு பணிப்பாளர் றியர் அட்மிரல் ஏ.கே.குருகே வழங்கிய முக்கியமான ஆதாரம் தொடர்பாக, 2009 மே 28ஆம் திகதி, குற்றப் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிடம் அளித்த முறைப்பாட்டில், குறிப்பிடத் தவறியது குறித்தும், அட்மிரல் கரன்னகொட மீது குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம், குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை மறைத்து, குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைப் பாதுகாக்க அவர் முனைந்துள்ளார் என்று, இப்போது தெரியவந்துள்ளது" என குற்ற விசாரணைப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-9)




# ‘கிண்ணம் வெல்வதே நான் கொண்ட லட்சியம்’

## ரோகித் சபதம்

“எனக்கு சாதனைகள் முக்கியமல்ல. உலக கிண்ணம் வெல்வதே முக்கியம்,”என, ரோகித் சர்மா தெரிவித்தார்.

இங்கிலாந்தில் உலக கிண்ணம் தொடர் நடக்கிறது. இதில், இந்திய ஆரம்ப வீரர் ரோகித் சர்மா ஓட்ட மழை பொழிகிறார். ஒரே உலக கிண்ணத் தொடரில் 5 சதங்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். இதுவரை 647 ஓட்டங்கள் குவித்துள்ள இவருக்கு சச்சினின் சாதனையை (2003, 673 ஓட்..) எட்ட இன்னும் 26 ஓட்டங்கள் தான் தேவைப் படுகிறது.

இது குறித்து துணைத் தலைவர் ரோகித் சர்மா கூறியது: உண்மையை சொன்னால், அந்த 26 ஓட்டங்கள் பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. சாதனை நிகழ்த்துவதற்காகஇங்கிலாந்துவரவில்லை. சிறந்த கிரிக்கெட் விளையாட வேண்டும். நிறைய ஓட்டங்கள் எடுத்து உலக கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பதே இலக்கு. எத்தனை ஓட்டங் கள் எடுத்தோம், எத்தனை விக்கெட் வீழ்த்தினோம் என்பது முக்கியமல்ல. கிண்ணம் வெல்வதே முக்கியம்.

கிரிக்கெட்டில் ஒவ்வொரு நாளும் புதிய நாள். ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றதில்லை அல்லது சதங்கள் அடித்த தில்லை என்ற எண் ணத் துடன் தான் ஒவ் வொரு முறையும் களமிறங்கு வேன். துடுப்பாட்டத்தில் சில ஒழுக்கம் இருந்தால், ஓட்ட மழை பொழியலாம். இதை எனது கடந்த கால அனுபவத்தில் இருந்து கற்றுக் கொண்டேன்.

பெரிய அளவில் ஸ்கோர் செய்வதற்கு, எனது ‘ஷொட்’ தேர்வு முக்கிய கார ணம். எந்த மாதிரியான ஆடுகளம், எப்படிப்பட்ட பந்துவீச்சாளர் என்பதை அறிந்து ‘ஷொட்’ அடிப்பேன். ஐந்து சதங்கள் அடிக்க வேண் டும் என்றெல்லாம் நினைக்க வில்லை. எனது பணி சிறப்பாக செயல்பட்டு, அணிக்கு வெற்றி தேடித் தருவது தான். நியூசிலாந் துக்கு எதிரான அரையிறுதியில் முழுபலத்தையும் வெளிப்படுத்தி, வெற்றியை வசப்படுத்துவோம். இவ்வாறு ரோகித் சர்மா கூறினார்.



பயிற்சியின்போது இந்தியாவின் ரோகித்

# ஆர்ஜென்ரீனா 3ம் இடம்




கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் ஆர்ஜென்ரீனா அணி மூன்றாவது இடம் பிடித்தது. சிலி அணியை 2-1 என்ற கணக்கில் வீழ்த்தியது.

பிரேசிலில் கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் நடக்கிறது. சாவ் பாலோவில் நடந்த மூன்றாவது இடத் திற்கான போட்டியில் ஆர்ஜென்ரீனா, சிலி அணிகள் மோதின.

ஆரம்பத்திலேயே ஆர்ஜென்ரீனா அணி ஆதிக்கத்தை தொடங்கியது. போட்டியின் 12வது நிமிடத்தில் அகுரோ முதல் கோல் அடித்தார். அடுத்த 10வது நிமிடத்தில், பாலோ (22) கைகொடுக்க, ஆர்ஜென்ரீனாவின் கோல் எண்ணிக்கை இரண்டாக மாறியது. முதல் பாதியில் ஆர்ஜென்ரீனா 2-0 என முன்னிலை பெற்றது.

இதனால், கோல் அடிக்க வேண்டிய நெருக்கடி சிலி அணிக்கு ஏற்பட்டது. இதற்கேற்ப, 59வது நிமிடத்தில் சிலிக்கு ‘பெனால்டி கிக்’ வாய்ப்பு கிடைத்தது. நட்சத்திர வீரர் விடால், பந்தை வலைக்குள் அனுப்பினார். இரு அணி வீரர்களாலும் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை. முடிவில், ஆர்ஜென்ரீனா அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம், 1989க்குப்பின் இரண்டாவது முறையாக மூன்றாவது இடம் பிடித்தது.

### மெஸ்சி ஆவேசம்

போட்டியின் 37வது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணித் தலைவர் மெஸ்சி பந்தை தட்டிச்செல்ல முயற்சித்த போது, சிலி அணித் தலைவர் கேரியை சற்று தள்ளி விட்டார். கோபம் அடைந்த கேரி, இரு முறை மெஸ் சியை நெஞ்சோடு நெஞ்சாகவும், தலையாலும் முட்டித் தள்ளினார். நடுவர் இரு வீரர்களும் தவறு செய்துள்ள னர் என முடிவு செய்து, ‘ரெட் கார்ட்’ காண்பித்தார். உடனடியாக, இரு தலைவர்களும் மைதானத்திலிருந்து வெளியேற, இரு அணியினரும் தலா 10 வீரர்களுடன் விளையாடினர்.

இது குறித்து மெஸ்சி கூறுகையில், “தொடர் முழுவதும் பிரேசில் அணிக்கு சாதகமாக நடக்கிறது. மூன்றாவது இடத்திற்கான போட்டி தொடங்கும் முன், நடுவர் போட்டியை அமைதியாக நடத்த விரும்புவதாக தெரிவித்தார். ஆனால், சில நிமிடங்களில் எனக்கு ‘ரெட் கார்ட்’ காட்டி வெளியேற்றினார். கோபா அமெரிக்கா தொடரின் ஊழலும், இப்படிப்பட்ட நடுவரின் செயல்பாடும் கால்பந்து விளையாட்டை பாதிக்கும்,” என்றார்.இதை, தென் அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பு மறுத்துள்ளது.

# உலகக்கிண்ணம்: கெய்ல் உருக்கம்

உலக கிண்ணத் தொடரில் பங் கேற்ற ஐந்து முறையும் அரை யிறுதிக்கு முன்னேற முடியாத சோகத்தில் கிறிஸ் கெய்ல். திரும்பினார்




மே.தீவுகளின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கெய்ல் (வயது - 39). கடந்த 2003ல் முதல் முறையாக உலக கிண்ணத் தொடரில் பங்கேற்றார். இம் முறை, இங்கிலாந்தில் 5வது முறையாக உலக கிண்ணத் தொடரில் தடம்பதித் தார்.

ஆனால், மே.தீவுகள் அணி 9 போட்டி களில் இரண்டு வெற்றி மட்டும் பெற்று, அடுத்த சுற்று வாய்ப்பை இழந்தது. இதில் கெய்ல் 9 போட்டிகளில் 242 ஓட்டங்கள் எடுத்தார்.

இது குறித்து கெய்ல் கூறுகையில், “ உலக கிண்ண அரங்கில் மே.தீவுகள் அணிக் காக ஐந்து முறை பங்கேற்றது பெருமை. ஆனால், ஒரு முறை கூட அரையிறுதிக்கு முன்னே றாமல் போனது ஏமாற்றமாக உள்ளது.

இங்கிலாந்து மண்ணில் உலக கிண்ணத்தை வென்றுவிடலாம் என நம்பினோம். இது எங்களுக்கு கைகூடவில்லை. இளம் வீரர்கள் உட்பட அனைவரும் எனக்கு ஆதரவு தந்தனர். இவர்களுடன் விளையாடிய அனுபவத்தை மறக்கவே முடியாது.

இந்த உணர்வை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை. இதுதான் எனது கடைசி உலக கிண்ணம். இன்னும் எனது உடலுக்கு ‘ரிஸ்க்’ ஏற்படுத்த முயற்சி செய்ய மாட்டேன். உலக கிண்ணம் இல்லை எனில், வாழ்க்கையே முடிந்துவிடாது.

சர்வதேச போட்டியை பொறுத்தவரை, இன்னும் சில போட்டிகளில் பங்கேற்பேன். ஹெட்மயர், ஹோப், பூரன் உள்ளிட்ட இளம் வீரர்கள் மே.தீவுகள் அணியை மீண்டும் உச்சத்திற்கு கொண்டு செல்வர். என்றார்.

# சொகைப் மலிக் ஓய்வு

பாகிஸ்தான் அணியின் அபாயகரமான சகலதுறை வீரர் சொகைப் மலிக் ஒரு நாள் அரங்கிலிருந்து விடைபெற்றார்.

பாகிஸ்தான் அணியின் ‘சகலதுறை துடுப்பாட்ட வீரர்’ சொகைப் மலிக் (வயது - 37), இதுவரை 35 டெஸ்ட் (1898 ஓட்..), 287 ஒரு நாள் (7534), 111 ‘ரி20’ (2263) போட்டிகளில் விளையாடி உள்ளார். ‘சுழலில்’ கைதேர்ந்த இவர், 287 ஒரு நாள் போட்டிகளில் 158 விக்கெட்டுக்களை வீழ்த்தி உள்ளார்.

கடந்த 2015ல் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார். இங்கிலாந்தில் நடக்கும் உலக கிண்ணத் தொடருடன் ஒரு நாள் போட்டியிலிருந்து விடை பெறுவதாக முன்பே அறிவித்திருந்தார்.

இந்தியாவுக்கு எதிராக மான்செஸ்டரில் (ஜூன் 16) கடைசியாக பங்கேற்றார். உலக கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி லீக் சுற்றுடன் திரும்பியது. இதனையடுத்து, மலிக் முறைப்படி ஓய்வை அறிவித்தார். ‘ரி20’ போட்டியில் தொடர்ந்து பங்கேற்பார்.

### ‘ரி20’இல் கவனம்

இது குறித்து மலிக் கூறுகையில்,

“எனக்கு பிடித்தமான, ஒரு நாள் போட்டியிலிருந்து விடை பெறுவது கடினமாக உள்ளது. ‘சீனியர்’ வீரராக உலக கிண்ணம் வெல்ல பாகிஸ்தானுக்கு கைகொடுக்க விரும்பினேன். எனது எண்ணம் போல நடக்கவில்லை. 20 ஆண்டாக ஒரு நாள் அரங்கில் விளையாடுவேன் என நினைத்து கூட பார்த்தது இல்லை. சம்பியன்ஸ் டிரொபி (2017) வென்றதை மறக்க முடியாது. இந்த ஓய்வின் காரணமாக, குடும்பத்தினருடன் அதிகமான நேரத்தை செலவழிக்கலாம். அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ‘ரி20’ உலக கிண்ணத் தொடரிலும் கவனம் செலுத்த முடியும்,” என்றார்.




சொகைப் மலிக்

### சானியா பெருமை

மலிக் மனைவியும், இந்திய டென்னிஸ் வீராங்கனையுமான சானியா ‘டுவிட்டரில்’ வெளியிட்ட செய்தியில்,’ வாழ்வில் ஒன்று முடிந்தால், மற்றொன்று தொடங்கும். தேசிய அணிக்காக நீங்கள் எட்டிய உயரத்தை எண்ணி, நானும், மகன் இஷானும் பெருமை கொள்கிறோம்,’ என, தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி

## டளஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு முடியுமா என உயர் நீதிமன்றத்தை வினவ அரசாங்க தரப்பினர் தயாராகி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும குற்றஞ்சாட்டியுள்ளார்.**



பொதுஜன பெரமுனவின் அகுரஸ்ஸ தொகுதி இளைஞர்- யுவதிகள் அமைப்புடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்னும் ஜனாதிபதித் தேர்தலுக்கு 136 நாட்களே உள்ளன. வேட்பாளர் பதிவுக்கு 106 நாட்களே உள்ளன.

இந்த நிலையிலேயே 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இன்னும் நீடிக்க முடியுமா? என விளக்கம் கோரி உயர் நீதிமன்றத்துக்கு செல்ல அரசாங்கத்தின் ஜனாதிபதித் தரப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அவ்வாறு சென்று தவறியாவது மாற்றமான தீர்வொன்றை பெற்றுக் கொண்டால், அன்றைய தினத்திலிருந்து அரசாங்கம் மரணிக்க ஆரம்பித்து விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்கள் முன்னெடுப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் கடமையில் ஈடுபடவுள்ள அரச அதிகாரிகளுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதற்கமைய அவர்களுக்கான பயிற்சிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் முதலில் மாகாண சபை தேர்தலை எதிர்பார்த்த போதிலும் பல்வேறு காரணங்களால் அந்தத் தேர்தல் தாமதமடைந்ததால் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்திற்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (7)

# தென்னக்கோன் தாக்கப்பட்ட சம்பவம் விசாரணைகளில் புதிய திருப்பம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்படவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடந்த நாளில் தென்னக்கோனின் வாகனத்தில் கிடைத்த கைரேகை, தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும் இராணுவ அதிகாரியான லலித் ராஜபக்ஷவின் கைரேகையுடன் ஒத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் இணைப்புச் செயலாளர் சிஷார ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

உபாலி தென்னக்கோனின் வாகனத்தில் அவரது கைரேகை எப்படி பதிவானது என்று சந்தேக நபர் எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந் நிலையில், இராணுவ அதிகாரி லலித் ராஜபக்ஷவை கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு சட்டமா அதிபர், டப்புல டி லிவேரா குற்ற விசாரணைப் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றும் சிஷார ஜெயரத்ன தெரிவித்தார்.

லலித் ராஜபக்ஷ சர்ச்சைக்குரிய திரிப்பொலி முகாமில் இருந்த ஒரு இராணுவ அதிகாரி என்றும் கூறப்படுகிறது.

2009 ஜனவரி 23ஆம் திகதி உபாலி தென்னக்கோன் இனந் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரும் அவரது மனைவியும் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# கிழக்கு மாகாணத்தை வெளிநாடுகளுக்கு கொடுத்தால் மேல் மாகாணத்தை விடவும் முன்னேற்றலாம்

## சம்பிக்க கூறுகிறார்



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை சீவா, லாவோஸ், வியட்நாம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு வழங்கப்படுமாக இருந்தால், அந்த மாகாணத்தை மேல் மாகாணத்தை விடவும் அதிவிரைவில் அபிவிருத்தி செய்யலாம் என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நடைபெற்ற தேசத்துக்கான பாதை எனும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது இலங்கையில் கிழக்கு மாகாணம், எமது திருகோணமலை, மட்டக்களப்பு வலயம் என்பவற்றை விஞ்ஞான ரீதியில் திட்டமிட்டு வெளிநாடுகளுக்கு திறந்து கொடுக்கப்படுமாக இருந்தால் பாரிய பொருளாதார வளர்ச்சியொன்றைக் காணலாம்.

இருப்பினும், சுதந்திரத்தின் பின்னர் 70 ஆண்டுகள் கடந்த பின்னரும் எமது கிழக்கு மாகாண கரையோரப் பகுதிகளுக்கு என்ன செய்திருக்கின்றார்கள்.

பிராந்தியத்துக்கோ, நாட்டுக்கோ பொருளாதாரத்தை சேர்க்கக் கூடிய, நாட்டையும் நாட்டு மக்களையும் பலப்படுத்தும் விதத்தில் பொருளாதார நலனொன்று அங்கு இருக்கின்றதா? இல்லை என்றே கூறவேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (7)

# பொலிஸ் விசேட படையினர் நால்வர் பணி நீக்கம்

(அங்குணகொலபெலஸ்ஸ)

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த, பொலிஸ் விசேட படையினர் நால்வர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறையிலுள்ள கைதிகளுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்கிய குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மற்றுமொரு பொலிஸ் விசேட படையணியின் அதிகாரி ஒருவரும் இந்தச் சம்புவம் தொடர்பில், இடமாற்றம் செய்யப்பட்டுள்ளாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# இராசி பலன்

**மீனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மேடம்:** மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், அம்பிகை வழிபாடு மகத்துவம் தரும்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்:** பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் சிறு தடங்கல்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** கூட்டு முயற்சி வெற்றி தரும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயண்களால் பலனுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் விருத்தியுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டல் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, சுக், ராகு, புத |
| | இராசி பலன் கிரகநிலை | | செவ் |
| | சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி காலை 6.13 மணிக்கு கன்னி-சந் | | |
| சனி, கேது | குரு | | சந் |

08.07.2019

ஆனி 23, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

சஷ்டி பிற்பகல் 12.02 மணிவரை

உத்தரம் முன்னிரவு 11.01 மணிவரை

சுபநேரம் 11.58-1.28 மணிவரை

இராகுகாலம் 7.28-8.58 மணிவரை

ஆனி உத்தர தரிசனம்

வளவன்

**தனுசு:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமை கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி:** தொழில் முயற்சிக்கு குறுக்கீடா இருந்தவர்கள் விலகுவர், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், ஆன்மீக நாட்டம் கூடும்.



யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான இரதோற்சவம் நேற்று நடைபெற்றது.

## அங்கஜன் எம்.பியினால் மானியம் வழங்கி வைப்பு




(யாழ்ப்பாணம்)

தெரிவு செய்யப்பட்ட 24 பயனாளிகளுக்கு வெங்காயக் கொட்டில்கள் அமைக்க மானியம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் முன்னாள் விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனால் வழங்கிவைக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட வெங்காயச் செய்கையாளர்களுக்கு 50 வீத மானிய அடிப்படையில் ரூபாய் 57 ஆயிரத்து 500 ரூபாவுக்கான காசோலைகள் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டன. (5-10)




# சமூக சேவைக்காக கௌரவ கலாநிதிப்பட்டம்



சிறந்த சமூக சேவையாற்றிய மைக்கா கோண்டாவில் தில்லையம்பதியைச் சேர்ந்த லயன் சின்னத்தம்பி ஆனந்தராசாவுக்கு International Global Peace University, USA யினால் கடந்த மாதம் 16 ஆம் திகதி தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பணியாளரான இவர் "வள்ளுவன் மேம்பாட்டுக் கழகம்" என்ற தன்னார்வத் தொண்டு நிறுவன பணிப்பாளராகவும் உள்ளார். கல்விக்கு பொருளாதாரம் ஒரு தடையல்ல என்ற நோக்கத்துடன் வறிய மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகளை வழங்கிவருவதுடன் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகளை மேற்படி நிறுவனத்தினூடாக வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-9)

# சட்டவிரோத மணல் அகழ்வு பொலிஸாரால் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -தனங்கிளப்புப் பகுதியில் கோழிப்பண்ணை என்ற போர்வையில் இடம்பெற்று வந்த சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் மணல் கடத்தல் சாவகச்சேரி பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது சாவகச்சேரி பொலிஸார் குறித்த பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொண்ட போது பாரிய நிலப்பரப்பில் கோழிப்பண்ணை என்ற போர்வையில் சுற்றி அடைக்கப்பட்டு அதற்குள் மணல் அகழ்வு இடம்பெற்று வந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இதன்போது அங்கு மணல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த உழவியந்திரம் ஒன்றினைப் பொலிஸார் கைப்பற்றியதுடன் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் கோழிப்பண்ணைக்கான எந்தத் தடயங்களும் இல்லை எனவும் ஆரம்பத்தில் இருந்து குறித்த பகுதியில் மணல் கடத்தல் இடம்பெற்று வந்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கள் இருவரையும் நாளை 9 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-30)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையும் யாழ்.நீரிழிவுக் கழகமும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை திருநெல்வேலி பொதுச் சந்தையில் இடம்பெறும். இம் மருத்துவ பரிசோதனையில் இரத்தத்தில் சீனியின் அளவு,B.M.I பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை என்பன இடம்பெறும். (5)

# போதையொழிப்பு வாரத்தை முன்னிட்டு ஆட்டோக்களில் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன






யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்க சுன்னாகம் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை செ. பிரதீபன்தலைமையில்நடைபெற்றது

இதில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி போக்குவரத்து பொறுப்பதிகாரி, வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவர், யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத் தலைவர் மற்றும் சுன்னாகம் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுன்னாகம் முச்சக்கரவண்டி சங்கத்தால் மது ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் போதைப்பொருள் பாவனை அற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் சுன்னாகம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியினாலும் பிரதேசசபைத் தலைவராலும் ஒட்டப்பட்டது. (5)

# போக்குவரத்துக் குற்றங்களுக்கு ரூபாய் 56,500 அபராதம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு வகையான போக்குவரத்துக் குற்றங்களுடன் தொடர்புடைய ஐவருக்கு கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் 56 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்தார்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து விதிகளை மீறியவர்களை சாவகச்சேரிப் போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை, வாகனக் காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, தலைக்கவசம் அணியாமை, இறை வரிப்பத்திரம் இல்லாமை ஆகிய குற்றங்களுக்காகவே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது. (5-10-114)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் வடக்கு வள்ளி தெய்வானை உடனுறை முருகையா தேவஸ்தான அதி சுந்தர பஞ்சதள இராஜகோபுர புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் முற்பகல் 10.35 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை இடம் பெறும். (5)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விஞ்ஞான மன்றத்தினால் 18 ஆம் அணி விஞ்ஞான, கணிதப்பிரிவு முகிழ்நிலை ஆசிரியர்களினால் விஞ்ஞான செயன்முறைசார் செயற்றிட்டமானது க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. இதில் யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களும் யா/கோரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய மாணவர்களும் பங்கு பற்றுநர்களாகக் கலந்து கொண்டனர். இச்செயற்றிட்டமானது விஞ்ஞான விரிவுரையாளர்களின் வழிகாட்டலுடனும் பீடாதிபதி சு.பரமானந்தம் ஆலோசனையுடனும் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின் ஆரம்ப வைபவமாக பீடாதிபதி சு.பரமானந்தத்தினால் நாடாவெட்டி ஆரம்பிக்கப்பட்டது. (படங்கள்:-சக்தி)

# இனம், மதம் என்பவற்றின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவில்லை

## மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

இனம், மதம் என்பதன் அடிப்படையில் நாம் ஒருபோதும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவில்லையென நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "நான் பிரபல்யத்துக்காக மக்களுக்கு சேவையாற்றும் ஒரு மனிதர் இல்லை. ஆனால் சில விகாரைகளில், அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் பதாகைகளில் என்னுடைய ஒளிப்படங்களை பதிவேற்ற வேண்டாம் எனக் கூறுகின்றார்கள்.

உண்மையாக என்னுடைய ஒளிப்படம் வெளியாக வேண்டும் என்பதற்காக சேவையாற்றும் விருப்பம் எனக்கில்லை.

மேலும் அரசாங்கம் ஒரு தீர்மானத்தின் கீழ் ஒருமித்து செயற்படும் போது, அதை இடத்திற்கு இடம் மாற்றமுடியாது. அத்துடன் எங்கள் அரசாங்கத்திடம் பணம் நன்றாக இருந்தால் எனது படமும் நன்றாகத்தான் இருக்கும்.

ஆனால் பெரும்பாலானோர் தங்களுடைய பெயரும் படமும் இடம்பெற வேண்டுமென்பதற்காகவே சேவை செய்கின்றனர் என மேலும் தெரிவித்தார். (7)

# பாம்பன் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள் மாயம்



(பாம்பன்)

பாம்பன் வடக்கு கடற்கரை பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் தொடர்பில் மூன்று நாட்களாகியும் எந்த வித தகவலும் கிடைக்காததால் மீனவர்களின் உறவினர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பாம்பன் வடக்கு மீன்பிடித் துறை முகத்தில் இருந்து 60 இற்கும் குறைவான நாட்டுப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் மீன்பிடித்துவிட்டு வழக்கம் போல் மறுநாள் காலை கரை திரும்பிய நிலையில் ல்ஸ்டீபன், அந்தோனி, வின்சன்ட், சின்தாஸ் உள்ளிட்ட நான்கு மீனவர்கள் இன்று வரை கரை திரும்பவில்லை.

இதனையடுத்து கரை திரும்பாத மீனவர்களை மீன்துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று கடந்த இரண்டு நாட்களாக சக மீனவர்கள் தேடிவருகின்றனர். ஆனால் மாயமான மீனவர்கள் நிலை குறித்து இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்பிடிக்கச் சென்று கரை திரும்பாத மீனவர்கள் குறித்து எந்தவித தகவலும் கிடைக்காததால் மீனவர்களின் உறவினர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

மேலும் மூன்று நாட்களாக கரை திரும்பாத மீனவர்களை பத்திரமாக உயிரோடு மீட்டுத்தர மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவ சங்க அமைப்புகள் மற்றும் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று கடல் சீற்றத்தால் மீனவர்கள் கடலில் காணாமல் போன சம்பவம் மீனவ கிராமங்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (9)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை தீர்மானிக்கும் சக்தியாக கல்முனை விவகாரம் -த.தே.கூ.எச்சரிக்கை

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பான நிலைப்பாட்டை பொறுத்தே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா, எதிர்ப்பதா? என தீர்மானிக்கப்படும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள சொறிக்கல்முனை ஹோலி குறோஸ் வித்தியாலய வீதியை, தார் வீதியாக புனரமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "இந்த நாட்டின் அரசாங்கத்துக்கு எதிராக கொண்டு வரப்படுகின்ற நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து பேசப்படுகிறது.

இந்நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகிய நாங்கள் பலதரப்பட்ட அழுத்தங்களை அரசாங்கத்துக்கு கொடுக்க இருக்கிறோம்.

இதில் முக்கியமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுகின்ற விடயத்தில் காத்திரமான அழுத்தத்தை இந்த அரசாங்கத்துக்கு கொடுக்கவுள்ளோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதா, இல்லையா? என கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சார்ந்த விடயமே தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கப்போகின்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சார்ந்த பிரச்சினைகளைத் தாண்டி வடக்கு,கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளையும் எடுத்துக்கூறி அவற்றையும் நடைமுறைப்படுத்தாமல் இந்த அரசாங்கம் தவிர்க்குமானால் அவர்களுக்கெதிராக சில நடவடிக்கைகளை எடுக்க நேரிடும்.

விசேடமாக நாங்கள் உரிமை சார்ந்த விடயங்களை முன்னெடுக்கின்ற அதேவேளை அபிவிருத்தி சார்ந்த விடயங்களையும் சமகாலத்தில் மேற்கொண்டு வருகிறோம்.

நாங்கள் ஒருபோதும் மாற்று சமூகத்திற்கு அடிமையாக இருக்க முடியாது. தமிழர்கள் வீரத்தோடு பிறந்தவர்கள். தமிழ்த்தேசியத்தின் மீதும் தமிழின் மீதும் பற்றுறுதி கொண்டவர்களாக எப்போதும் இருக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த பேச்சுவார்த்தை



(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் தேர்தலை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென்று உள்ளக பொது நிர்வாக அலுவல்கள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசியல் யாப்பில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக உரிய காலம் குறிப்பிடப்படவில்லை என்றும் ஜனாதிபதி தேர்தலில் அனைத்து இன மக்களினதும் வாக்குகள் மூலம் வெற்றி பெறக்கூடிய கட்சி ஐக்கிய தேசிய கட்சியாகும் என்றும் அவர் தெரிவித்தார். (7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## கிறிஸ்ரியன் சாள்ஞ் றெக்சன்



தேசிய ரீதியில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற "தோழர்களாகிய நூல்களே நேசமி நண்பர்கள்" என்னும் போட்டியில் பங்குபற்றி யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் கிறிஸ்ரியன் சாள்ஸ் றெக்சன் என்ற மாணவன் தேசிய ரீதியில் வெற்றி பெற்று சீன நாட்டிற்கான சுற்றுலா பயணத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இம்மாணவனை பாடசாலைச் சமூகம் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றது.

பாடசாலைச் சமூகம்,
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.

(9498)


# மைத்திரி ஆட்சியை முடித்து ரணசிங்க ஆட்சியை உருவாக்க எதிர்பார்த்துள்ளேன்-ரொசான் ரணசிங்க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செல்ல விரும்புவதாயின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐந்து வருடத்தில் ஓய்வுபெறவே பதவிக்கு வந்தார் என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என பொலநறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.


ஹாரிஸ்பத்துவவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவருக்கும் எந்த நேரத்திலும் வந்து இணைந்து கொள்ள முடியும். நாம் இணைந்து பயணிப்பதாயின் சுதந்திரக் கட்சியினர் உண்மைகளை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அரசியலிலிருந்து ஓய்வு பெறும் வரையில்தான் நானும் காத்திருக்கிறேன். பொலநறுவையில் மைத்திரியின் ஆட்சிக் காலத்தை முடித்துக் கொண்டு, ரணசிங்க ஆட்சியை உருவாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என மேலும் தெரிவித்தார். (7-9)

# தலைவர் பிரபாகரன் தொடர்பில் ஜனாதிபதி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தக்கூடாது

## வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போதைப் பொருள் வியாபாரம் செய்துதான் போரை நடத்தினார் என ஒரு நாட்டின் ஜனாதிபதி பேசுவது சரியானதல்ல. உண்மையான தரவுகள், ஆதாரங்களுடன் கருத்துக்களை வெளியிட வேண்டும் என முன்னாள் முதலைமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு மாதத்திற்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மிகவும் கொள்கைப் பிடிப்பானவர், கொள்கையோடுதான் அவர் போராட்டம் நடத்தினார் என்று தெரிவித்தார்.

ஆனால் பிறகு திடீரென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் போதைப்பொருள் வியாபாரம் செய்துதான் போரை நடத்தினார் என்ற மாற்றி மாற்றி பேசுகிறார். இவர் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பேசும்போது ஆதாரங்களை வெளியிட வேண்டும்.

அவ்வாறில்லாமல், ஒரு நாட்டின் ஜனாதிபதி எழுந்தமானமாக பேசுவது சரியானதல்ல. மேலும் போராட்ட இயக்கங்களுக்கிடையில் போதைவஸ்து வியாபாரம் நடைபெற்றதா? என்பது பற்றிய விளக்கங்களையோ அல்லது அப்படிப்பட்ட வரலாறு பற்றியோ இப்பொழுது கருத்துச் சொல்வது சரியானதல்ல.

இயக்கங்களைப் பொறுத்தவரையில் கடந்தகாலங்கள் எல்லாம் முடிந்த காலங்கள். ஆகையால் பல்வேறு இயக்கங்கள் தங்களது போராட்டங்களை நடத்துவதற்காக , பணத் தேவைக்காக, சட்டபூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் பொதுவாக மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவும் பல்வேறு வகையிலும் பணங்கள் திரட்டப்பட்டிருக்கின்றன.

இதேவேளை ஒரு நாட்டின் ஜனாதிபதியானவர் எல்லாத் தகவல்களையும் பெற்றுக் கொள்ளும் அதிகாரமுடையவர். எல்லா உளவுத்துறையும் அவரிடம் இருக்கின்றது. ஆகையால் உண்மையான தரவுகள் இருந்தால் அந்த தகவல்களை அவர் உத்தியோகபூர்வமாக வெளியிடுவதுதான் அவர் சொல்கின்ற கூற்றினுடைய உண்மை, பொய்களை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமையும் என மேலும் தெரிவித்தார். (7)

# கொமர்ஷல் வங்கியால் மாணவர்கள் கௌரவிப்பு







(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கிக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண ஆரம்பப் பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா மற்றும் யாழ்.கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் தி.ஜெயபாலன், உதவி முகாமையாளர் எஸ்.பிரஜீத் மற்றும் அருட்பணி டேமியன் ஆகியோர் கலந்து கொண்டனர். (10)

# யாழ்.நகர்ப் பகுதியில் புதிய தொழில்நுட்ப கோபுரங்கள் அமைப்பதற்கு எதிராக மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் யாழ். நகர்ப் பகுதியில் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய கோபுரங்கள் அமைப்பதற்கு எதிராக நேற்றுக் காலை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகாமையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கும் போது, யாழ் நகர்ப்பகுதியில் யாழ்.மாநகர சபையால் அமைக்கப்பட்டு வரும் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கோபுரங்கள் பற்றி பொதுமக்களாகிய தமக்கோ அல்லது தமது வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்களுக்கோ எவ்விதமான விடயப் பரப்புக்களையும் தெளிவுபடுத்தாமல் தான்தோன்றித்தனமாக அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

தற்போது அமைக்கப்பட்ட புதிய கோபுரத்தை அண்டிய பகுதியில் மூன்று பிரதான பாடசாலைகள் காணப்படுவதாகவும் நெருக்கமான பல குடியிருப்புக்களும் இருப்பதாலும் அமைக்கப்பெற்ற கோபுரத்தை அகற்றுமாறு கோரிக்கை விடுத்தனர்.

தமது கோரிக்கைக்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்காவிட்டால் போராட்டத்தை எதிர்வரும் மாதங்களில் போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என எச்சரித்தனர். (7-10)

# நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கைது

(நீர்கொழும்பு)

வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து, நபர் ஒருவரை தாக்கி விட்டு கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கடான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய நேற்று பிற்பகல் நீர்கொழும்பு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பகுதியை சேர்ந்த 53 வயதுடைய ஜயவீர ஆரச்சிகே ரொய்ஸ் விஜித பெர்ணான்டோ என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீர்கொழும்பு நகர சபையின் எதிர்க்கட்சி தலைவர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரையில் 5 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாடுகளில் பாதுகாப்பை பெற்றுவிட்டு சிலர் அமெரிக்காவை விமர்சிக்கின்றனர்

(கொழும்பு)

சிலர் அமெரிக்காவில் வசித்துக் கொண்டோ ஏகாதிபத்தியவாதிகளை விமர்சிப்பதாகவும் குடியுரிமையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்து வருபவர்களின் மனைவியும் பிள்ளைகளும் அமெரிக்காவிலேயே இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எப்போதும் அமெரிக்காவை பற்றியே பேசுகின்றனர். தொலைக் காட்சியில் பார்த்தாலும் கூட்டங்களை நடத்தினாலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவே பேசுகின்றனர்.

சிலர் (கோத்தபாய ராஜபக்ஷ) குடியுரிமையை இரத்துச் செய்யவில்லை. கடவுச்சீட்டை மட்டுமே ஒப்படைத்துள்ளனர் குடியுரிமையை இரத்துச் செய்து விட்டு வந்தாலும் மனைவியும் மகனும் அமெரிக்காவிலேயே இருப்பார்கள்.

ஒரு காலை அங்கும் ஒரு காலை இங்கும் வைத்துள்ளனர். வெளிநாடுகளில் பாதுகாப்பை பெற்று வாழ்ந்து விட்டு, அமெரிக்காவை விமர்சிக்கின்றனர். இதுதான் நகைச்சுவை. இதனைதான் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. (7-9)


# இலங்கைக்கு வரமறுத்தார் கனடா பிரதமர்

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தருமாறு விடுக்கப்பட்ட அழைப்பினை கனேடிய பிரதமர் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு கனேடிய பிரதமரிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும், அவரின் அழைப்பினை கனேடிய பிரதமர் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



ஒரு நாட்டின் தலைவர் மற்றுமொரு நாட்டுடன் நெருங்கிய உறவுகளை பேணும் நோக்கில், மற்றைய நாட்டின் தலைவருக்கு உத்தியோகபூர்வ விஜயத்திற்கான அழைப்பை விடுப்பதே வழமை.

இதற்கான தகவல் பரிமாற்றங்கள் வெளிவிவகார அமைச்சு மற்றும் தூதரகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும். இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வது அல்லது திகதிகள் சம்பந்தமான பிரச்சினை இருந்தால், அழைப்பு விடுத்த தலைவரை தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுப்பது வழமையான நடைமுறை.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை கனேடிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் தமது நாட்டிற்கு விஜயம் செய்யுமாறு மைத்திரிபால சிறிசேனவிற்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது. (7)

# இந்திய அரசின் வீட்டுத்திட்டம் எனது கோரிக்கையாலே கிடைத்தது

## சஜித் கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையில் இந்திய அரசு, வீடமைப்புத் திட்டங்களை மேற்கொண்டதற்கு தனது கோரிக்கையே காரணமென அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்திருந்த போது, நீங்கள் அனைவரும் என்ன செயற்பாடுகளை இதுவரை முன்னெடுத்துள்ளீர்கள் என அமைச்சர்களிடம் கேட்டார்.

இதன்போது, திஸ்ஸமஹாராமை பிரதேசத்தில் நரேந்திர மோடி கிராமம் என்ற பெயரில் கிராமம் ஒன்றை நிர்மாணிக்க இருப்பதாக அவரிடம் நான் கூறினேன்.

அதற்கு அவர் என்னை பாராட்டினார். அதன்பின்னரே இலங்கையில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தேன்.

குறித்த கோரிக்கைக்கு அமைவாகவே வீடமைப்புத் திட்டத்துக்காக 12ஆயிரம் இலட்சம் ரூபாயை இந்திய அரசு இலங்கைக்கு தற்போது வழங்கியுள்ளது" என சஜித் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# போதைப்பொருள் கடத்தல்

# பொதுஜன பெரமுன எம்.பி. விரைவில் கைது

(கொழும்பு)

டுபாயிலிருந்து நாடு கடத்தப்பட்ட போதைப் பொருள் வர்த்தகர் மாகந்துரே மதூஷிடமிருந்து கிடைத்த தகவல்களை வைத்து விரைவில் பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

மாகந்துரே மதூஷ் தொடர்பான விசாரணைகள் மறைந்து போயுள்ளதே என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் வினவியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மதூஷிடமிருந்து பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன. அவருடன் தொடர்புடைய முக்கிய புள்ளிகள் குறித்தும் அவர் சிலருடைய பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

முன்னர் ஒரு தடவை குறித்த பாராளுமன்ற உறுப்பினரை கைது செய்ய அவருடைய வீட்டைப் பொலிஸார் சுற்றிவளைத்த போது முன்னாள் ஜனாதிபதி தான் அவரைக் காப்பாற்றி விட்டதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் குறிப்பிட்டார். (7)

# இலங்கையில் இன அழிப்பு தொடர்கிறது

## பழ.நெடுமாறன்

இலங்கையில் இன அழிப்பு நடவடிக்கை தற்போதும் தொடர்வதாக உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உலகத் தமிழர் பேரமைப்பு சார்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் படுகொலை 10ஆம் ஆண்டு நினைவேந்தல் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், "கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்ந்தது. இதில், 1.50 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஈவு இரக்கம் இல்லாமல் படுகொலை செய்யப்பட்டனர்.

இதுகுறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையம் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியது. ஆனால், இதுவரை எத்தகைய விசாரணையும் நடைபெறவில்லை. இது பற்றி உலக சமுதாயமும் கவலைப் படாத சூழ்நிலை நிலவுகிறது.

இலங்கையில் வாழ்கின்ற மக்களின் துயரம் தற்போதும் தீரவில்லை. மேலும் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன. இலங்கையில் நிகழ்ந்தது போர்க்குற்றம் அல்ல. திட்டமிட்டு இன அழிப்பு நடவடிக்கையைத் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் நிகழ்ந்த தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு குற்றம் தொடர்பாக இதுவரை சர்வதேச சமுதாயம் விசாரணை நடத்தவோ, அவர்களைத் தண்டிக்கவோ முன்வரவில்லை.

போஸ்னியாவில் இனப்படுகொலை நடந்தபோது, ஐ.நா. பாதுகாப்புப் படை அங்கே அனுப்பப்பட்டு, அந்த மக்கள் பாதுகாக்கப்பட்டனர். தற்போது இலங்கையிலும் இன அழிப்பு நடவடிக்கை தொடர்கிறது.

எனவே, இதில் ஐ.நா. சபை தலையிட்டு அம்மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இந்த மாநாடு நடைபெறுகிறது" என மேலும் தெரிவித்தார். (7-9)

# கல்முனையிலிருந்து கதிர்காமத்திற்கு விசேட பேருந்து சேவை ஆரம்பம்

(கல்முனை)

கல்முனையிலிருந்து கதிர்காமத்திற்கு விசேட பேருந்து சேவை இடம்பெற்றுவருகின்றது.

கல்முனை பேருந்து தரிப்பு நிலையத்தில் இருந்து தினமும் காலை 6 மணிமுதல் கதிர்காமம் மற்றும் உகந்தை மலை முருகன் ஆலயங்களுக்கான பேருந்து சேவை இடம்பெற்று வருகின்றது.

இந்த சேவையின் மூலம் தினமும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கதிர்காமம், உகந்தை நோக்கி பயணிக்கின்றனர்.

கல்முனையில் இருந்து கதிர்காமத்திற்கான ஒரு வழிப்பயணக் கட்டணமாக 393 ரூபாயும், இதேபோன்று உகந்தை மலை முருகன் ஆலயத்திற்கு 305 ரூபாயும் அறவிடப்படுகின்றது. பக்தர்களின் நலன்கருதி முன்கூட்டிய ஆசனப்பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றது.


அதிகமான பக்தர்கள் வருகை தருமிடத்து வசதிக்கேற்ப மேலதிக பேருந்து சேவைகளும் ஒழுங்குபடுத்தி கொடுக்கப்படுவதாக கல்முனை பேருந்து தரிப்பு நிலையத்தின் நேரக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார்.

கதிர்காமம் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை 17 ஆம் திகதி நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது. கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்பவர்கள் தற்போது உகந்தை மலை முருகன் ஆலயத்திற்குச் சென்று அங்கிருந்து காட்டுப் பாதை ஊடாக கதிர்காமம் நோக்கிய யாத்திரையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி திறக்கப்பட்ட காட்டுப்பாதையூடாக இதுவரை 21 ஆயிரத்து 640 இற்கும் அதிகமான பக்தர்கள் பயணம் செய்துள்ளனர். இந்த காட்டுப்பாதையானது எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை 3 மணியுடன் மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## குறை'களை' பதிகம் 58

# கடை கட்டும் கலாசாரம் ஒழிக



மப்பன்றிக் கானமழை
காணா மண்ணில்
ஏர் ஏற்றி உழுது விதைத்து
பாருக்கே சோறு போட்ட தமிழினம்
வீட்டிற்கு முன்பக்கம் கடை கட்டி
வாடகைக்கு விட்டுப் பிழைப்பை ஓட்ட
தலைப்பட்டதோ! தறிகெட்டதோ!

வீதி அகலிப்பென்று
காணிகளை முழுங்கிவிட
மிச்சம் மீதி இடத்திலே
முற்றமின்றி முழுவதுமாய் அடைத்துவிட
கடைகட்டி காற்றில்லா
அண்டவெளிபோல் வீட்டையாக்கி
ஏசி வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறது
சிறகிழந்த பறவைகளாய் தமிழினம்

வீட்டுக்கொரு கடையென்றால்
விற்பவர் யார்? வாங்குவார் யார்?
ஓ... விற்பதும் வாங்குவதும் யாமோ?

வேர்க்க விறுவிறுப்பாய்
வயலில் உழைத்த காலம் மாறி
வியர்வைக்குப் பயந்து
ஏசிக்குள் முடங்கிக் கிடக்க
ஓசி இந்தக் கடைக் கலாசாரமோ?

பேப்பரைத் திறந்தால்
விற்பனைக்கு, வாடகைக்கு என்ற
விளம்பரங்கள் பார்க்கையிலே
எம் விகிதாசாரத்தில் அதிகம்
இந்தக் கடைகளோ என்று
எண்ணத் தோன்றுகிறது

அறிவார்ந்த என்னினமே!
கடைகட்டி உழைக்கலாமென்று
கடன்பட்டு உடன்பட்டு
கடைசியில் உடன்கட்டைதானோ
உன் மனைவி பிள்ளைகட்கு

சிந்தித்துச் செயற்படுங்கள்
இல்லையேல் எம் தேசத்தை
சுவர்களும் கதவுகளுமே ஆளும்
கடைகளைச் சொன்னேன்


மாவை. நா.கஜேந்திரன்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# குடிநீருக்கு அவதியுறும் ஆனைவிழுந்தான் மக்கள்






கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பிரதேச மக்கள் குடிநீர் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். குறித்த பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக அப்பகுதி மக்கள் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அப்பகுதியில் குடிநீர் விநியோகம் குழாய் மூலம் வழங்கப்படுகின்ற போதிலும், குறிப்பிட்ட சில பகுதிகளிற்கு வழங்கப்படுவதில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் அப்பகுதியில் உள்ள மக்களிற்கு படையினர் குடிநீரை விநியோகித்து வருகின்றனர். இருப்பினும் அப் பகுதியில் உள்ள நீர் குழாய்கள் சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்த நிலையில், தமது நீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்டு தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# துப்பாக்கி ரவைகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் கோந்தைபிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வளாகத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ரி-56 ரக துப்பாக்கியின் ஒரு தொகை ரவைகளை மன்னார் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை மீட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்படையினர் மன்னார் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸாந்த தலைமையில் சென்ற பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் கோந்தை பிட்டி பகுதியில் உள்ள குறித்த வீட்டின் வளாகத்தில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன் போது தென்னை மரம் ஒன்றிற்கு அருகில் சிங்கள பத்திரிகை ஒன்றில் சுற்றப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தும் 14 ரவைகளை மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (9-285)




# நானாட்டான் பிரதேசசபை உப அலுவலகத்துக்கான அடிக்கல் நாட்டல்



நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட முருங்கன் பகுதியில் பிரதேச சபை உப அலுவலகம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் பரஞ்சோதி தலைமையில் இடம்பெற்றது.

வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 12.2 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா முருங்கன் பிட்டி பகுதியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மதத்தலைவர்கள்,வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன். நானாட்ட பிரதேச சபை உபதவிசாளர், பிரதேசசபை செயலாளர், பிரதேச சபை உறுப்பினர்கள்,ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் பின்னர் மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட பெரிச்சார்கட்டு புனித அந்தோனியார் சனசமூக நிலையமும் திறந்து வைக்கப்பட்டது. (9-285)



வவுனியா புதூர் நாகதம்பிரான் வருடாந்த (2019) பொங்கல் உற்சவத்தில் தொண்டர் சேவையாற்றிய கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலய இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபை உறுப்பினர்களுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் க.தெய்வராசா தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் பொறுப்பாசிரியரும் மகளிர் பிரிவு பொறுப்பாளருமான திருமதி. ச.கேதீஸ்வரி மற்றும் ஆணையாளர் சிவத்திரு.தேசகீர்த்தி. வை.மோகனதாஸ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட ஆணையாளர் வை.ஜெகதாஸ் ஆகியோர் ஆசிரியர், அதிபர் ஆகியோருக்குக்கும் விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது

## கலந்துரையாடல்

வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றிவரும் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி NIC கல்வி நிலையத்தில் நடைபெறும். என வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (9)

## பரிசளிப்பு விழா

(மல்லாவி )

மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா வித்தியாலயத்தின் முதல்வர் த.யோகானந்தராசா தலைமையில் இன்று திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக,

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண மேலதிக கவ்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ் கலந்து கொள்ளவுள்ளார். இந் நிகழ்வுக்கு வித்தியாலயத்தின் மாணவர்களது பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உட்பட அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலை சமூகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (9-15)

# மக்களின் முன்னேற்றங்களை தடுத்து; எமக்கு அபிவிருத்தி தேவையில்லை

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

எமது மக்களின் முன்னேற்றங்கள்ளை தடுத்து எமது பகுதிக்கு தரப்படும் அபிவிருத்தி எமக்குத் தேவையில்லை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் எமது மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கிராமசக்தி வேலைத்திட்ட முன்னேற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி என கூறும் சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன இணைந்து ஆட்சியமைத்தபோது பல ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் கதைத்துதான் குறித்த காணிகள் விடுவிக்கப்பட்டதாக கூறினர். ஆனால் பலாலியில் இடம் பெற்ற நிகழ்வில் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை மாவை சேனாதிராஜா மீண்டும் முன்வைத்துள்ளார். இது தொடர்பில் என்ன கூறுகின்றீர்கள் என வினவியபோது,

இங்குள்ள அனைத்து பிரதிநிதிகளும் கதைத்துத்தான் காணிகள் விடுவிக்கப்பட்டன. அரசாங்கத்தில் நல்லது நடக்கும்போது தமக்கு பங்குண்டு எனவும், கெட்டது எனில் தமக்கும் அரசுக்கும் பங்கில்லை என்றது போலவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது எனவும், இது பொய்யான குற்றச்சாட்டு. இவ்வாறு பொய்யான விடயங்களை கூறி மக்களை ஏமாற்றும் செய்பாடுகளை விட்டுவிட்டு, மக்களின் நலன்சார்ந்து செயற்பட வேண்டும்.

பலாலியில் விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அது உண்மையில் சிறந்த விடயம். ஆனால் பலாலி விமான நிலையத்திற்கு செல்லும் வீதியை மறித்து மயிலிட்டி ஊடாக கொண்டு வருவதற்கு முயல்கின்றனர். அங்குள்ள காணிகளை விடுவிக்கப்படாமல் வைத்திருப்பதற்கே இவ்வாறு மாற்று வீதியை அமைக்கின்றனர். குறிப்பாக காணியை விடுவிக்காது இருப்பதற்கு எம்மவர்களேதான் துணைபோகின்றனர். இவ்வாறான அபிவிருத்தி எமக்கு தேவை. ஆனால் மக்களின் முன்னேற்றத்தை தடுத்து எமக்கு அபிவிருத்தி தேவை இல்லை. எமது காணிகள் எமக்கு வேண்டும்.

மக்களின் தேவைகள், மக்களின் அபிலாசைகள் வேறு இருக்க அரசிடம் இலஞ்சமாகவும், பிச்சையாகவும் கம்பரெலிய உள்ளிட்ட விடயங்களை பெற்று அதை எம்மக்களிற்கு கொடுத்து மக்களை அடகு வைத்து தம்முடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர் . எனவே எமது மக்களிற்கு என்ன விடயத்தை நிறைவேற்றுவோம் என மக்களிற்கு கூறி இந்த நல்லாட்சியை உருவாக்கினார்களோ, அதை நிறைவேற்றிவிட்டு அடுத்த விடயங்களிற்கு செல்லலாம் என மேலும் தெரிவித்தார். (9)

# முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் வேகத்தை குறைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு- பரந்தன் ஏ- 32 வீதியில் மாலை 6 மணி தொடக்கம் அதிகாலை 6 மணி வரையான நேரப்பகுதியில் மணல் ஏற்றிச் செல்லும் ஹன்டர் வாகனங்கள் அதி வேகமாக செல்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த வீதி போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள வீதியாக காணப்படுகிறது.மாலை நேரங்களில் சிறுவர்கள் கல்வி நிலையங்களுக்கு சென்று வருவதும் அலுவலக நேரம் முடிந்து உத்தியோகத்தர்கள் பயணம் செய்வதும் வழமை. இந்த நிலையில் பெரிய ஹன்டர் வாகனங்கள் அதி வேகமாக போட்டி போட்டு செல்வது வழக்கமாகியுள்ளது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் போக்குவரத்து பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும். குறித்த வீதி வழியாகவே மணல் கடத்தலில் ஈடுபடும் வாகனங்கள் அதி வேகமாகப் பயணிக்கின்றன என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.(9-316)



முல்லைத்தீவு குமுழமுனை கற்பகப்பிள்ளையார் ஆலயத்தின் இரதோற்சவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. குமுழமுனை மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் முற்பகல் 11.30 மணியளவில் தேர் இருப்பிடத்தையடைந்தது. ஒன்பதாம் திருவிழா உபயகாரர்களால் அன்னதானமும் வழங்கப்பட்டது.
(படங்கள்:- நெடுக்குளம் செய்தியாளர்)

## வரட்சியால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள பூநகரி மக்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் நிலவும் வரட்சி காரணமாக 3426 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக பூநகரிப்பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் வரட்சி காரணமாக பல்வேறு பகுதிகளிலும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அதேவேளை பல வாழ்வாதாரத் தொழில்களும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிக வரட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதியாக பூநகரிப்பிரதேசம் காணப்படுகின்றது.

குறிப்பாக, இந்தப்பிரதேசத்தில் மக்களுக்கான குடிநீர்த்தட்டுப்பாடு நிலவுவதுடன் அவர்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நீர் நிலைகள் வற்றிக்காணப்படுவதனால் கால்நடைகள் நீர் தேடி அலைகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

பூநகரிப்பிரதேசத்தின் வரட்சி நிலைமைகள் தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலாளரைத்தொடர்பு கொண்டு வினவியபோது, பூநகரிப் பிரதேசத்தில் வரட்சியினால் 491 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது 2087 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்வரும் நாட்களில் இந்தத் தொகை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறு பூநகரிப் பிரதேசத்தில் இதுவரை 3426 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-315)




## மல்லாவி ஆதார வைத்தியசாலையில் மருத்துவ சேவைகளை சீர்படுத்துமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவி வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டாலும் அதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படாமை, வைத்திய நிபுணர்கள் இன்மை என்பவற்றால் ஏ-9 வீதிக்கு மேற்குப் புறமாகவுள்ள மக்கள் தமக்கான மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாது பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலகப்பிரிவுகளையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ள மல்லாவி ஆதார வைத்தியசாலை சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான மருத்துவத்தேவையை நிறைவு செய்யும் ஓர் வைத்தியசாலையாகக் காணப்பட்டாலும் அதன் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

குறிப்பாக, இரத்த வங்கி இன்மை, மகப்பேற்று வசதியின்மை, சத்திரசிகிச்சைப்பிரிவு இன்மை, போதிய விடுதி வசதியின்மை என பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதுடன், வைத்திய நிபுணர்கள் இல்லாத நிலையும் கர்ணப்படுகின்றது.

பிரதேச வைத்தியாசலையாகக் காணப்பட்ட இவ்வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளபோதும், அதற்கான தேவைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை.

இதனால் இங்கு சிகிச்சைக்காகச் செல்கின்ற நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை மற்றும் வவுனியா பொதுவைத்தியசாலைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

இதனால் நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சுமார் 37 மில்லியன் ரூபா செலவில் சிறுநீரக சிகிச்சைப்பிரிவு அமைக்கப்பட்டு அண்மையில் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ள போதும், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளர்கள் வாராந்தம் குருதி சுத்திகரிப்பதற்காக வவுனியா பொதுவைத்தியசாலை, செட்டிகுளம், மன்னார் போன்ற வைத்தியசாலைகளுக்கு சென்று வருகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் இல்லாத மிகவும் பின்தங்கிய இந்தக் கிராமங்களிலிருந்து சிறுநீரக நோயாளர்கள் இரத்தச்சுத்திகரிப்பிற்காக வாரத்தில் இரண்டு நாட்கள் வவுனியா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அதாவது, வவுனியா வைத்தியசாலையில் காலை 6.00 மணிக்கு ஒரு தொகுதி நோயாளர்களுக்கு சுத்திகரிப்பு இயந்திரத்தை பொருத்தி முற்பகல் 11.00 மணி வரையும் சுத்திகரிப்பு சேவை இடம்பெறும்.

அதன் பின்னர் மற்றைய தொகுதியினருக்கு பொருத்தப்பட்டு சுத்திகரிக்கும் போது, பிற்பகல் 5.00 மணியைத் தாண்டிவிடும். இந்த நிலையில் இந்தப் பிரதேசங்களிலிருந்து செல்கின்ற நோயாளர்கள் காலை 6.00 மணிக்கு வைத்தசாலைக்குச்செல்வதற்கோ அல்லது மாலையில் சிகிச்சையை முடித்து வீடு திரும்புவதற்கோ உரிய போக்குவரத்து வசதி இல்லாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சில வேளைகளில் வவுனியா வைத்தியாசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அங்கிருந்து செட்டிகுளம் வைத்தியசாலைக்கு மாற்றப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவித்துள்ளதுடன், மல்லாவியில் குறித்த வைத்தியசாலை இயங்க வைப்பதன் மூலம் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த தாங்கள், இந்தப் பிரதேசத்திலே சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்குமென தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுநீரக சிகிச்சைப் பிரிவிற்குரிய இயந்திரங்கள் இன்மை, வைத்திய நிபுணர்கள் இன்மை, இரத்த வங்கி இன்மை என்பவற்றால் இதனை செயற்படுத்த முடியாது இருக்கின்றபோதும், அவர்களுக்கான மாதாந்த கிளினிக் மாத்திரமே நடைபெறுவதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள இவ் வைத்தியசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்து தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச பொது அமைப்புக்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## பாலத்தின் கட்டுமான பணிகளை விரைவுபடுத்துமாறு கோரிக்கை



கிளிநொச்சி அக்கராயன் முறிகண்டி வீதியில் ஆயிரம் கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் பாலத்தின் கட்டுமானப்பணிகளை துரிதப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் திருமுறிகண்டி பிரதான வீதியில் ஆபத்தான நிலையில் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாது காணப்பட்ட பாலத்தினை புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்துள்ள நிலையில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஆயிரம் கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இப்பாலம் தெரிவு செய்யப்பட்டு பாலத்தின் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பாலத்தின் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்குமாறும் இப்பாலத்தின் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படும் நிலையில் போக்குவரத்திற்காக மாற்றுப் பாதை அமைக்கப்படாது அக்கராயன் குடியிருப்பு வீதி மாற்றுப்பாதையாக பயன்படுத்தப்படுவதனால் வீதி சேதமடைவதாகவும் பொதுமக்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளை நேற்று முன்தினம் சந்தித்து இதன் முன்னேற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடியதுடன், பாலத்தின் கட்டுமானப்பணிகளை துரிதப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை மாற்று வழிப் பாதையாக பயன்படுத்தும் வீதியினை புனரமைத்து வழங்குமாறு கோரியுள்ளார். (9-315)



கிராமசக்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்றங்கள் தொடர்பில் கேட்டறியும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆனைவிழுந்தான் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் கிராம சக்தி வேலைத் திட்டத்தின் ஏற்பாடுகள், முன்னேற்றங்கள் மற்றும் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

## புகையிரதம் மோதி ஆணொருவர் பலி!

(கண்டாவளை)

கிளிநொச்சி 155 ஆம் கட்டை பகுதியில் நேற்று அதிகாலை புகையிரம் மோதியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி பயணித்த புகையிரதம் கிளிநொச்சி 155 ஆம் கட்டை பகுதியில் உள்ள புகையிரத கடவையில் இருந்து 100 மீற்றர் தொலைவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநாச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி பகுதியில் கடந்த 25 ஆம் திகதி புகையிரதக் கடவையில் இடம்பெற்ற விபத்தில் 6 படையினர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (9-315)



# பாரதம்

## நீட் தேர்வை விலக்களிக்கும் தமிழக அரசின் வரைபு நிராகரிப்பு

(சென்னை)

தமிழக மாணவர்களுக்கு நீட் தேர்வை விலக்களிக்கும் தமிழக அரசின் இரு சட்ட வரைபுகளை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

நீட் தேர்வு குறித்து சென்னை உயர் நீதிமன்றில் நடந்த வழக்கு ஒன்றில் நீட் தேர்வில் இருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்களிக்க கொண்டு வரப்பட்ட தமிழக அரசின் இரு சட்ட வரைபுகளே நிராகரிக்கப்பட்டதாக மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்த விபரங்களை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி, இந்தியா முழுவதிலும் மருத்துவக்கல்லூரி மற்றும் பல் மருத்துவக்கல்லூரி மாணவர் சேர்க்கைக்காக தேசிய தகுதிக்கான நுழைவுத்தேர்வு என்னும் 'நீட்' தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் நுழைவுத் தேர்வு கிடையாது. உயர்தரக் கல்வி மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலேயே இந்தப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடந்துவருகிறது. நுழைவுத் தேர்வு என்றால், கிராமப் புறங்களில் உள்ள ஏழை மாணவர்களுக்கு நிச்சயமாக இதுபோன்ற தேர்வு எழுதுவதற்கு பயிற்சியில்லாத நிலையில், மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கான வாய்ப்புக் கிடைக்காது.

இந்த ஆண்டு உறுதியாக 'நீட்' தேர்வு மூலமே மாணவர் சேர்க்கை நடைபெறவேண்டிய நிலையில், தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பின் காரணமாக, தமிழக சட்டசபையில் கடந்த ஜனவரி 31ஆம் திகதி 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிப்பதற்காக ஒரு சட்ட வரைபு நிறைவேற்றப்பட்டு, அந்த வரைபு ஆளுநரின் ஒப்புதலையும் பெற்று, இப்போது ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டது.

இந் நிலையில், நீட் தேர்வு குறித்து சென்னை உயர் நீதிமன்றில் நடந்த வழக்கு ஒன்றில் நீட் தேர்வில் இருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்களிக்க கொண்டு வரப்பட்ட தமிழக அரசின் இரு சட்ட மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## மகாராஷ்டிரா அணை உடைப்பு; உயிரிழப்பு 19 ஆக அதிகரிப்பு



(மும்பை)

மகாராஷ்டிரா மாநிலத்தில் அணை உடைந்த விபத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களில் 20 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை அதி தீவிரமடைந்து பெய்து வருகிறது. மும்பை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கொட்டித் தீர்த்த கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது. கனமழை காரணமாக நீர்நிலைகள் நிரம்பி வருகின்றன.

ரத்னகிரியில் உள்ள திவாரே அணை வேகமாக நிரம்பி வந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் திடீரென அணையின் ஒரு பகுதி உடைந்து தண்ணீர் வெளியேறியது.

இதனால் அணையின் அருகிலுள்ள வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. அந்த வீடுகளில் இருந்தவர்களை காணவில்லை. மேலும், அணையில் இருந்து வெளியேறிய தண்ணீர் அருகில் உள்ள 7 கிராமங்களை சூழ்ந்துள்ளது. இதையடுத்து மாவட்ட அதிகாரிகள், பொலிஸார், பேரிடர் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்நிலையிலே 20 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. (7)

## ஹெலிகொப்டர் விபத்து ஏழு பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் பஹாமா தீவில் இருந்து தனியார் ஹெலிகொப்டர் ஒன்று புளோரிடா மாநிலத்துக்கு புறப்பட்டது.

அந்த ஹெலிகொப்டரில் அமெரிக்காவின் பிரபல கோடீஸ்வர் கிரீஸ் கிரைன் மற்றும் அவரது மகள் உட்பட மொத்தம் 7 பேர் பயணித்துள்ளனர்.

கிராண்ட் கே என்ற தீவுப் பகுதியைக் கடந்தபோது ஹெலிகொப்டர் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகி கடலுக்குள் விழுந்தது.

தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

எனினும், மீட்புக் குழு வருவதற்கு முன்னர் ஹெலிகொப்டரில் இருந்த கிரீஸ் கிரைன் மற்றும் அவரது மகள் உள்ளிட்ட அனைவரும் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். (7)

## பாலகோட் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானுக்கு நகர்வு

**பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் இந்திய விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலையடுத்து, அங்கிருந்த பயங்கரவாதிகள் தங்களது பயற்சி முகாம்களை ஆப்கானிஸ்தானுக்கு மாற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆப்கானிஸ்தானில் உள்ள குனார், நங்கர்கர், நூரிஸ்தான், கந்தகார் ஆகிய மாகாணங்களில் பயங்கரவாதிகள் தங்கள் முகாம்களை அமைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**இதன்காரணமாக கந்தகார், காபூலில் உள்ள இந்திய தூதரகங்களின் அதிகாரிகளுக்கு எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (7)**

## ஆப்கானில் கூட்டுப்ப... 25 பயங்கரவாதிக...

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேட்டோ தலைமையிலான கூட்டுப்படை நடத்திய விமானத் தாக்குதலில் தலிபான் இயக்கத்தைச் சேர்ந்த 25 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மற்றும் ஐ.எஸ்.பயங்கரவாத இயக்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகளால் ஸ்திரமற்ற அரசியல், சமூக மற்றும் பாதுகாப்புச் சூழல் உருவாகியுள்ளது. நாட்டின் ஒரு சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தலிபான்கள், அரச படைகளுக்கு எதிராக தொடர்ந்து தாக்



## எண்ணெய்க்கப்பலை வி... தக்க பதிலடி கொடுக்...

(டெஹ்ரான்)

எண்ணெய்க் கப்பலை பிரித்தானியா விடுவிக்கவில்லை என்றால், அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என ஈரானின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.


சிரியா நோக்கிப்பயணித்துக் கொண்டிருந்த எண்ணெய்க் கப்பல் ஒன்று சிறைபிடிக்கப்பட்டது.

மசகு எண்ணெய் ஏற்றிக் கொண்டு பிரித்தானியாவின் ஆளுகைக்குட்பட்ட ஜிப்ரால்டர் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போதே குறித்த கப்பல் சிறைபிடிக்கப்பட்டது.

பிரித்தானிய கடற்படையினரின் உதவியுடன் ஜிப்ரால்டர் மாகாணப் பொலிஸார் குறித்த கப்பலைச் சிறைபிடித்துள்ளனர்.

சிரியாவிலுள்ள பன்யாஸ் சுத்திகரிப்பு ஆலைக்கு வழங்குவதற்காக மசகு எண்ணெய் ஏற்றி வந்த கிரேஸ் 1 என்ற கப்பலே இவ்வாறு சிறைபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் பொரு



ளாதார... வனங்... யும் அ... டிக்கை... பட்டுள்...
இத... பிரித்த... பதற்ற...
இர...

## ஆப்கானிஸ்தானில் துப்பாக்கிச்சமர் 19 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் படையினருக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 19 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானின் ஹெராத் மாகாணத்தில் உள்ள கராக் மாவட்டத்தில் பாதுகாப்புப் படை சோதனைச் சாவடிகள் மீது தலிபான் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் திடீரென புகுந்தனர். அங்கிருந்தோரை நோக்கி சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

பயங்கரவாதிகள் தாக்குதலுக்கு பாதுகாப்புப் படையினரும் தகுந்த பதிலடி கொடுத்தனர். இருதரப்புக்கும் இடையில் பல மணி நேரம் துப்பாக்கிச் சமர் நீடித்தது.

இந்த மோதலில் பாதுகாப்புப் படையினர் 9 பேர், தலிபான் பயங்கரவாதிகள் 10 பேர் பலியாகினர். இதில் தலிபான் இயக்கத்தின் தளபதி முல்லா கவுசுதிங்கும் ஒருவர் என தகவல்கள் வெளியாகின. மேலும் 15 பயங்கரவாதிகள், 6 பாதுகாப்புப் படையினர் படுகாயம் அடைந்தனர். தொடர்ந்து அப்பகுதியில் பதுங்கியுள்ள தலிபான் பயங்கரவாதிகளைத்தேடும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் தீவிரப்படுத்தி வருகின்றனர். (7)

## லிபி... போர்...



லிபி... நடைபெ... உயிரி... ஆயிரத்... அங்கு... வேண்... காப்புச்...
மே... கள் த... பட்டு. 5... ஐ.நா.... தெரிவி...
இத... வெளிய... கப்பட்டு...
லிபி...

# வெளிநாடு

## ...ப்படைத் தாக்குதல் ...திகள் உயிரிழப்பு



...குதல் நடத்தி வருகின்றனர். இழந்த பகுதிகளை மீட்க இராணுவமும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் கந்தகார் மாகாணத்தின் மராப் மாவட்டத்தில் தலிபான்கள் தங்கியிருக்கும் இடத்தை குறி வைத்து நேட்டோ தலைமையிலான கூட்டுப்படை தாக்குதல் நடத்தியது.

விமானங்கள் மூலம் குண்டுகளை வீசித் தாக்கியதில், 25 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (7)

## சட்டவிரோத குடியேற்றவாசிகள் அனைவரும் வெளியேற்றப்படுவர்

### ட்ரம்ப் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

சட்டவிரோதமாக குடியேறியுள்ள அனைவரும் விரைவில் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் அனைவரையும் அங்கிருந்து வெளியேற்றுவதில் ட்ரம்ப் உறுதியாகவுள்ளார்.

இந்தப் பிரச்சினையை அவர் தீவிரமாகவே எடுத்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில், சட்ட விரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள ட்ரம்ப், 'அவர்கள் விரைவில் வெளியேற்றப்படுவார்கள். பல்லாண்டு காலமாக சட்ட விரோதமாக குடியேறிய மக்களைத்தான் நாங்கள் அகற்றுகிறோம்' என மேலும் தெரிவித்தார். (7)

## ...ல விடுவிக்காவிட்டால் ...டுக்கப்படும் - ஈரான்



...ளாதாரத் தடை விதிக்கப்பட்ட சிரியா நிறுவனங்களில் அந்த சுத்திகரிப்பு ஆலையும் அடங்கும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்காரணமாக ஈரான் மற்றும் பிரித்தானியாவிற்கு இடையில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ஈரானின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி மொஹ்சென் ரெஸாய் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், 'ஈரானிய எண்ணெய்க் கப்பலை பிரித்தானியா விடுவிக்கவில்லை என்றால், ஒரு பிரித்தானிய எண்ணெய்க் கப்பல்ல கைப்பற்றுவது எங்கள் அதிகாரிகளின் கடமையாகும்.

இஸ்லாமிய ஈரான் அதன் 40 ஆண்டுகால வரலாற்றில் எந்தவொரு போரிலும் ஒருபோதும் விரோதத்தைத் ஆரம்பித்ததில்லை.

ஆனால் கொடுமைப்படுத்துபவர்களுக்கு பதிலடி கொடுப்பதில் ஒருபோதும் தயங்கியதில்லை' என பதிவிட்டுள்ளார். (7)

## எதிர்க்கட்சியினருடன் அதிகாரப்பகிர்விற்கு சூடான் இராணுவத்தினர் இணக்கம்

(கார்டூம்)

சூடானில் எதிர்க்கட்சியினருடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள இராணுவ ஆட்சியாளர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

சூடான் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சியினர் கடந்த 6 மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் போராட்டக் குழுவினருக்கும், இராணுவத்துக்கும் இடையே எதியோப்பியா மற்றும் ஆபிரிக்க ஒன்றியப் பிரதிநிதிகள் முன்னிலையில் கடந்த 2 நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவிலே இதற்கான இணக்கப்பாடு எட்டப் பட்டது.



கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் கிடைத்த இந்த வெற்றியை எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தேசியக் கொடி ஏந்தி கொண்டாடியுள்ளனர்.

புதிய ஒப்பந்தத்தின்படி, முதல் 18 மாதங்களுக்கு இராணுவத்திடம் இருக்கும் ஆட்சி, பின்னர் சிவில் தலைமையிடம் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (7)

## லிபியாவில் உச்சமடையும் உள்நாட்டுப்போர்

### போர் நிறுத்தத்தை மேற்கொள்ள ஐ.நா.வலியுறுத்து



லிபியாவில் கடந்த 3 மாதங்களாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டியுள்ள நிலையில், அங்கு போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

மேலும், அந்தப் போரின்போது அகதிகள் தடுப்பு முகாமில் தாக்குதல் நடத்தப்பட்டு, 53 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கும் ஐ.நா.பாதுகாப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. பாதுகாப்பு சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

லிபிய தலைநகர் திரிபோலியின் தஜூரா பகுதியில் அகதிகள் முகாம்கள் மீது கடந்த செவ்வாய்க் கிழமை இரவு நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 53 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தை ஐ.நா. பாதுகாப்பு சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும், போரில் ஈடுபட்டுள்ள அனைத்துக் குழுவினரும் உடனடியாக பதற்றத்தைத் தணித்து போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

## துனிசியாவில் அவசரநிலைச் சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பு

(டுனிஸ்)

துனிசியா நாட்டில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரநிலை சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீட்டித்து ஜனாதிபதி பேஜி சைட் எஸ்ஸெப்ஸி கடந்த 5 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

துனிசியா நாட்டில் இஸ்லாமிய சட்டங்களுக்குட்பட்ட ஆட்சியை அமைக்கும் நோக்கத்தில் சில குழுவினர் ஆயுதமேந்திய பயங்கரவாதிகளாக செயற்பட்டு வருகின்றனர்.

வெளிநாட்டினர் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் பொலிஸார், அரசு அதிகாரிகளை குறி வைத்து இவர்கள் பயங்கரவாத தாக்குதல்களை நடத்துகின்றனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தலைநகர் டுனிஸ் நகரிலுள்ள அருங்காட்சியகத்தில் இந்த பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 20 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு 3 மாதங்களுக்குப் பின்னர் சோசீ என்னும் இடத்திலுள்ள கடற்கரை சொகுசு விடுதி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 30 வெளிநாட்டினர் உட்பட 38 பேர் பலியாகினர்.

அதே ஆண்டின் நவம்பர் மாதத்தில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் படையினர் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல்களையடுத்து அந்நாட்டில் முதன்முறையாக 24.11.2015 ஆம் ஆண்டு 'எமர்ஜென்சி' எனப்படும் அவசர நிலை சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து, உள்நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அதிகரிக்கும் வேளைகளில் எல்லாம் அடுத்தடுத்து அவசரநிலை சட்டம் பிரகடனம் செய்யப்படுகிறது.



அவ்வகையில், அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட காலக்கெடு கடந்த 5 ஆம் திகதியுடன் முடிவடைந்ததால் அவசரநிலைச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீட்டித்து துனிசியா ஜனாதிபதி பேஜி சைட் எஸ்ஸெப்ஸி உத்தரவிட்டுள்ளார். (7)

# அனைத்துலக தீவிரவாத, மத அடிப்படைவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள சிறப்புப் பிரிவு

(கொழும்பு)

அனைத்துலக தீவிரவாதக் குழுக்கள் மற்றும் உள்நாட்டு மத அடிப்படைவாதக் குழுக்களின் அச்சுறுத்தலைக் கண்காணிப்பதற்கும், எதிர்கொள்வதற்குமான சிறப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சின் கீழ் இந்த சிறப்புக் கண்காணிப்புப் பிரிவு அமைக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சிறப்புப் பிரிவுக்கு பொறுப்பாக, மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். படைகளின் தளபதியாக இருந்த இவர், இந்தப் புதிய பதவியை பொறுப்பேற்றுக் கொள்வதற்காக கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் அதிகமான சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள், மதிப்பீடுகளைச் செய்வதற்கும், எதிர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இந்தப் பிரிவுக்கு நியமிக்கப்படவுள்ளனர் என, மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த சிறப்புப் பிரிவுக்கான அதிகாரங்கள் தொடர்பான அரசிதழ் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களை இந்த சிறப்புப் பிரிவு உருவாக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# இந்திய உதவித்திட்டத்தின் முதலாவது மாதிரிக் கிராமம் அங்குரார்ப்பணம்




(கம்பஹா)

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மாதிரிக் கிராமங்கள் செயற்றிட்டத்தின் கீழ் இந்திய உதவியுடன் கம்பஹா மாவட்டத்தின் ரனிதுகம பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது மாதிரிக்கிராமம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன், முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

வீடமைப்பு, நிர்மாணத்துறை, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி ஷில்பக் அம்புலே ஆகியோர் இணைந்து மாதிரிக்கிராமத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

1200 மில்லியன் ரூபா இந்திய நன்கொடை உதவித்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 2400 வீடுகளை உள்ளடக்கியதாக 100 மாதிரிக்கிராமங்களை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இவை ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கென இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுவரும் 60 ஆயிரம் வீடுகளுக்கு மேலதிகமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் பெண் வேட்பாளர்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பெண் வேட்பாளர் ஒருவர் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் பண்டாரநாயக்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தாம் கவனம் செலுத்தி வருவதாகவும் கட்சி அரசியல்களின் ஊடாக நாட்டை மேலும் அதளபாதாளத்திற்கு இட்டுச் செல்ல முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எந்த வொரு அரசியல் கட்சியினதும் ஆதரவின்றி சுயாதீனமாக போட்டியிடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (7)

# ஆசிய கரையோர காவல்படைத் தலைவர்களின் கூட்டம் நேற்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

ஆசிய கரையோரக் காவல் அமைப்புகளின் தலைவர்களின் 15 ஆவது, கூட்டம் கொழும்பில் நேற்று ஆரம்பமாகியது. இக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இலங்கையில் முதன் முறையாக இந்தக் கூட்டம் நடை பெறுவதாக இலங்கை கரையோரக் காவல்படை தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஆசியாவில் உள்ள 22 உறுப்பு நாடுகள், பிராந்தியங்களின் பிரதிநிதிகள் மற்றும் கண்காணிப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தக் கூட்டத்தில், உயர் மட்ட கொள்கைசார் விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஏற்பது இகழ்ச்சி

ஒருநாள் நபிகள் நாயகத்திடம் ஒரு இளைஞன் வந்து நின்றான். உடம்பு நல்லா இருந்தது...இருந்தாலும் அந்த இளைஞன் இவரிடம் பிச்சை கேட்டான்.

"உன் வீட்டிலே எதுவுமே இல்லையா?" என்று கேட்டார் இவர்.

"ஒரு ஒட்டகத் தோல் இருக்கு! அதை விரிச்சுப் போட்டு அதிலே தான் படுக்கிறோம். ஒரே ஒரு பாத்திரம் இருக்கு தண்ணீர் குடிப்பதற்கு. அதைத்தான் பாவிக்கின்றோம். இந்த இரண்டும் தான் எங்களுக்கு இருக்கிற ஆஸ்தி!" என்றான் அந்த இளைஞன்.

நபிகள் நாயகம் பார்த்தார். "நீ உடனே வீட்டுக்குப் போய் அந்த இரண்டு பொருட்களையும் இங்கே எடுத்துக்கொண்டு வா!" என்றார்.

இவன் உடனே வீட்டுக்குப் போய் அந்த இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.

நபிகள் நாயகம் அங்கே இருந்த அவருடைய தோழர்களைப் பார்த்து, "நீங்க யாராவது இதை விலை கொடுத்து வாங்கிக்கிறீர்களா?" என்றார்.

உடனே ஒருத்தர் "நான் ஒரு நூறு ரூபாய் கொடுத்து அதை வாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

"வேறு யாராவது அதிக விலை கொடுக்க முடியுமா?" என்று ஒரு கேள்வி கேட்டார்.

"நான் இருநூறு ரூபாய் கொடுக்கிறேன்" என்றார் இன்னொருத்தர். உடனே அவரிடம் அந்தப் பொருட்களை விற்றார். அவர் கொடுத்த காசை வாங்கி இந்த இளைஞனிடம் கொடுத்தார்.

"தம்பி முந்நூறு ரூபாய் இருக்கு இப்ப கையிலே. இதிலே ஒரு சிறிது பணத்தை எடுத்துக் கொண்டு போய் ஏதாவது தானியம் வாங்கிக்கொள். அதை சமைத்து நீயும் உன் வீட்டிலே உள்ளவர்களும் சாப்பிடுங்கள்.

மிகுதிப் பணம் இருக்கல்லவா அதற்கு ஒரு கோடரி வாங்கிக் கொண்டு என்னிடம் வா" என்றார். உடனே அவன் போனான். அதே மாதிரி செய்தான். ஒரு கோடரி வாங்கிக்கொண்டு இவரிடம் வந்து சேர்ந்தான். இவர் அந்தக் கோடரிக்கு காம்பு ஒன்று தயார் செய்து கொடுத்தார்.

"தம்பி இதை எடுத்துக் கொண்டு காட்டுக்குப் போ! காய்ந்த மரக் கிளைகளை வெட்டிக்கொண்டு வா! அதையெல்லாம் கடைத் தெருவுக்குக் கொண்டு போய் விற்பனை செய்து பதினைந்து நாள் கழித்து என்னிடம் வா, உனக்கு எவ்வளவு இலாபம் கிடைத்தது என்று சொல்லு" என்றார். இவன் 'சரி' என்று சொல்லி விட்டுப் போனான். பதினைந்து நாள் கழித்து வந்தான்.

முதல் தடவை அவன் இவரிடம் வந்ததுக்கும் இப்ப வருவதற்கும் நிறைமி வித்தியாசம் இருந்தது. இப்ப வந்தபோது அவன் முகத்திலே ஒரு தெளிவு இருந்தது. மலர்ச்சி இருந்தது. அவன் மிகவும் மகிழ்ச்சியோடு பேசினான்.

"ஐயா இந்த பதினைந்து நாளிலே நான் நிறையப் பணம் சம்பாதித்தேன். அதிலே உடுக்கிறதுக்கு ஆடையும் வாக்கிக்கொண்டேன். இப்ப நான் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன். அடுத்தவர்களை நம்பிப் பிழைக்க வேண்டிய அவசியமே இனிமேல் எனக்கு இல்லை" என்றான்.

இதைக் கேட்டு நபிகள் நாயகம், "நீ சொல்லுறதை கேட்கிற போது எனக்கு சந்தோசமாக இருக்கு. எப்பவும் முயற்சிக்குத் தகுந்த பலனை ஆண்டவன் கொடுக்கிறான் என்பதை மறந்திடாதே! பிச்சை கேட்கிறவர்களை ஆண்டவன் விரும்புறதில்லை" என்று அந்த இளைஞனுக்கு உபதேசம் செய்தார்.

இது அவனுக்கு மட்டும் செய்த உபதேசம் இல்லை! உடம்பு நல்லா இருந்தும் பிச்சை எடுக்கவேண்டும் என்று நினைக்கிற எல்லோருக்கும் செய்த உபதேசம்!

"கையேந்தும் செய்கையினும்
காடு சென்று விறகு வெட்டி
மெய்யேந்தும் வாழ்வதனை
மெச்சுகின்ற நாயகமே!"

அப்படியென்று இதைப்பற்றி பாடியிருக்கிறார்கள்.

பொதுவாக இதுமாதிரி பெரியவர்கள் செய்திருக்கின்ற உபதேசங்களைக் கேட்டு அதன்படி நடந்துகொள்வது எல்லோருக்குமே நல்லது. பலபேர் உபதேசங்களைக் கேட்கிறார்கள். ஆனால் அதன்படி நடக்கிறதில்லை.

அதனாலே தான் வீணாப் போய்விடுகிறார்கள். ஒரு நல்ல வித்துவான் அருமையாக ஆர்மோனியம் வாசிப்பார். குடிப் பழக்கம் அவரை கெடுத்துவிட்டது. பிச்சை எடுக்கிற அளவுக்கு வந்துவிட்டார்.

ஒரு பெரியவர் இதைப் பார்த்தார். "இதோ பாருங்கள்... உங்களிடம் நல்ல சங்கீத ஞானம் இருக்கு, திறமை இருக்கு. அப்படி இருக்கும் போது அநாவசியமாக எதுக்கு இப்படி பிச்சை எடுக்க வேண்டும்? இப்ப நான் ஒரு அருமையான ஆர்மோனியம் வாங்கி அதை உங்களுக்கு பரிசாகக் கொடுக்கிறேன். அதை உபயோகப்படுத்தி இனிமேல் நீங்கள் சுயமாக சம்பாதித்து சாப்பிட வேண்டும்" என்றார். இவரும் மிகவும் நம்பிக்கையோடு 'சரி' என்றார். அவரும் ஒரு நல்ல ஆர்மோனியப் பெட்டியை வாங்கிக் கொடுத்தார்.

"ஒரு மூன்று மாதம் கழித்து மறுபடியும் என்னை வந்து பாருங்க! எப்படி இருக்கு நிலைமை? என்று சொல்லுங்கள் என்றார். வித்துவான் மிகவும் பவ்யமாக அதை வாங்கிட்டுப் போனார்.

அவர் சொன்னது மாதிரியே மூன்று மாதம் கழித்து திரும்பி வந்தார். ஆனால் வெறுங்கையோடு வந்தார்.

'இன்னொரு ஆர்மோனியப் பெட்டி வாங்கிக் கொடுக்கத் தேவையில்லை' என்றார். "ஏற்கனவே வாங்கிக் கொடுத்தது எங்கே?" என்று கேட்டார் இவர். "அடகுக் கடையிலே இருக்குது" என்றார். இவரையெல்லாம் எப்படி திருத்துகிறது?

# அவன்கார்ட் நிறுவன விவகாரம்; கோத்தாவை கைது செய்ய வேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்து

(கொழும்பு)

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். அவன்கார்ட் கடல் பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் உட்பட ஏனைய அதிகாரிகளை கைது செய்யும் அதே நேரத்தில், அந்த நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கியமையால் கோத்தபாய ராஜபக்ஷவையும் கைது செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.**

அவன்கார்ட் நிறுவனத்திற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் மக்களின் பணத்தை தவறாகப் பயன்படுத்தியதற்கும் அவசியமான சூழலை ஏற்படுத்தி கொடுத்தவர் கோத்தபாய ராஜபக்ஷ. அவ்வாறின்றி நிறுவனத்தின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளை கைது செய்வதில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)





# தற்போதைய அரசாங்கத்திலேயே மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர்

## ருவான் விஜேவர்த்தன சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்திலேயே மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ருவான் விஜேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கடந்த ஆட்சியில் இடம்பெற்ற கடத்தல், தாக்குதல், வெள்ளைவான், ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் உள்ளிட்ட எந்தவொரு சம்பவங்களும் கடந்த 4 வருடங்களில் இடம்பெறவில்லை.

அந்தவகையில் கடந்த அரசாங்கத்தை விட தற்போதைய அரசாங்கத்திலேயே அதிக சுதந்திரத்தை மக்கள் பெற்றுள்ளனர்.

மேலும் அழுத்தம், அச்சுறுத்தல் இன்றி வெகுசன ஊடகங்களின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக, அரசாங்கம் என்ற ரீதியில் நாம் செயற்பட்டு வருகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# அடுத்தகட்ட தீர்மானம் பற்றி கலந்துரையாடவுள்ள இராஜினாமா செய்த முஸ்லிம் அமைச்சர்கள்



அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்காக எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் பங்கேற்கும் முக்கிய கூட்டமொன்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஏ.எச். பௌசி தெரிவித்ததாவது,


நாட்டில் அசாதாரண நிலைமைகளை கட்டுப்படுத்தி அமைதியான நிலைமைகள் ஏற்படுத்துவதற்காக இக்கட்டான நிலைமையில் முஸ்லிம் பிரதிநிதிகள் தங்களின் அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்திருந்தார்கள்.

இந்நிலையில் தற்போதைய அரசியல் நிலைமைகள், முஸ்லிம்களுக்கு எதிராக தொடரும் நெருக்கடியான நிலைமைகள், கல்முனை வடக்கு உப பிரிவைத் தரமுயர்த்துதல், மீண்டும் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றல், உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இதேநேரம், முதற்கட்டமாக ஜனாதிபதி, பிரதமரைச் சந்தித்து எமது சமூகம் சார்ந்த கருத்துக்களை முன்வைத்திருந்தோம். மீண்டும் அத்தலைவர்களை நேரில் சந்திப்பதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

அதற்கான நேர ஒதுக்கீடுகள் தற்போது வரையில் உறுதியாகவில்லை. எவ்வாறாயினும் அடுத்த வார இறுதிக்குள் சந்திப்புக்களைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் முஸ்லிம் ஆளுநர்கள், அமைச்சர்களுக்கு தொடர்பு இருப்பதால் அவர்கள் அதிகாரங்களைக் கொண்ட பதவிகளிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கோரி அத்துரலிய ரத்ன தேரர் உண்ணாவிரதமிருந்ததையடுத்து அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் பதவி விலகியிருந்ததோடு மட்டுமல்லாது பாராளுமன்றத்தில் உள்ள 20 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)




### ஒய்யாரமாய் உலா வருபவளே

அலை கடல் நடுவே
ஆழ்கடல் அலை மீது
இசை மழை பொழிபவளே
ஈசன் சரிபாதி ஆனவளே
உன்னை நாடி வரும் பக்தர்க்கு
அமுதளித்து அருளும்
என்னவள் நாகபூஷணியே
ஏக்கமுடன் கை நீட்டுபவர்க்கு
ஐயமின்றி உதவிக்கரம் நீட்டுபவளே
ஒய்யாரமாய் உலா வருபவளே
ஓடி, நாடி வரும் பக்தர் குறை தீர்ப்பவளே
ஔடதமாய் காட்சி அளிப்பவளே சரணமம்மா.

வ.பவளகேசி
கொய்யாத்தோட்டம்

### நலமருள்வாய் நாயகியே

கொடியேறியெங்கும் கொலுவிருந்து
எம் கொடுவினையகல
அருள்பாலிக்கும் நயினை அன்னையே
அகிலாண்டேஸ்வரியே
உன்னை நாமென்றும்நினைந்து
உளமுருகி துதிக்க
நாள்தோறும் நல்லருள் தந்து
நலமருள்வாய் எங்கள்
நயினை நாயகியே போற்றி

சி.சிவசிந்துஜா
சுழிபுரம்.

### தாயே நயினை நாகபூஷணி

தாயே நயினை நாகபூஷணி தாயே
எமை தயைவுடன் பாரும் அம்மா
பாரில் பக்தர்கள் எல்லாம் உமை
பக்தியுடன் பணிகின்றோம்
தாயே எங்கள் கவலைகள் துன்பங்கள் களைவாயே
நயினை பதியில் வீற்றிருக்கம் எங்கள்
தாயே நாக பூஷ-ணியே.

நவாலியூர்
ம.லலிதாம்பிகை

### நலம் வாழ வேண்டுகின்றோம்

நாகம் குடை பிடிக்கும் நயினைத்தாயே
நாடி வந்து நலம் கேட்கும் அம்மா தாயே
ஓடி வரும் அனைவர்க்கும் கோடி வரம் கொடுத்து
கூடி நலம் வாழ வேண்டுகின்றோம் அம்மா.

ச.லிகேசன்

# மக்களின் குடியிருப்பு முறையில் ஏற்பட்ட மாற்றமும் குடியிருப்பு நிர்மாணிக்க அனுமதி பெறும் முறையும்

07

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



வீதியின் அகட்டலுக்கு காணியின் ஒரு பகுதி உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் இல்லாதபோது, அப்படியான ஒரு கோடு காணிப்படத்தில் வராது. இவ்வாறான கோட்டுக்கான சான்றிதழே வீதிக் கோட்டுச் சான்றிதழ் **(Street line certificate)** எனப்படும். இச் சான்றிதழ் மூலம் ஒரு உள்ளூராட்சி சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எந்தவொரு கட்டடமும் அப் பகுதிக்குள் நிர்மாணிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதாகும். இச் சான்றிதழை தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து உள்ளூராட்சி சபையிடம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதேபோல் கட்டடக் கோட்டுச் சான்றிதழ் **(building line certificate)** என்பது ஒரு காணியில் கட்டடம் நிர்மாணிக்கப்படும்போது தரையில் கட்டடத்தின் விளிம்பு இருக்கும் எல்லைக்கான சான்றிதழ் ஆகும். கட்டடத்தின் விளிம்புக் கோட்டுக்கும் வீதிக்குமிடையே எந்தவொரு கட்டடமும் நிர்மாணிக்கப்படல் ஆகாது.

இச் சான்றிதழ் மூலம் ஒரு உள்ளூராட்சி சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எந்தவொரு கட்டடமும் அப் பகுதிக்குள் நிர்மாணிக்கப்படவில்லை, என்பதை உறுதிப்படுத்துவதாகும். கட்டடக் கோட்டுக்கும் **(building line)** வீதியின் விளிம்புக்குமான இடைவெளி தொடர்மாடிக் கட்டடத்தின் உயரத்தைப் பொறுத்து வேறுபடும். உயரமில்லாத கட்டடங்களின் கட்டடக் கோடும் வீதிக் கோடும் பல சந்தர்ப்பங்களில் ஒன்றுடன் ஒன்று பொருந்தும்.

கொழும்பு மாநகர சபையைப் பொறுத்தமட்டில் வீதிக் கோட்டுச் சான்றிதழ் / கட்டடக் கோட்டுச் சான்றிதழ் பெறுவதற்கு உரிமையாளர் / கட்டடக்காரர் **(developer)** உரிய விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரியின்/ உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி மற்றும் 1:1000 அளவிடை காணியின் அளவைப் படம் **(Survey Plan)** ஆகியவற்றை கொழும்பு மாநகர சபையின் நகர திட்டமிடல் பிரிவில் **(City Planning Division)** சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் வழங்குவதற்கு பணம் அறவிடப்படும்.


❋ உள்ளூராட்சி மன்றங்களினால் உரிமை பெறப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் **“ non vesting certificate”**

பல ஆண்டுகளாக ஒரு காணிக்கு சோலை வரிகளைச் செலுத்தாமல் இருந்திருந்தால் உள்ளூராட்சி மன்றங்கள் அக்காணியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கும். அப்படியாயின் கட்டவேண்டிய முழுவரியையும் உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செலுத்தி **“non vesting certificate”** ஐப் பெற்றுக் கொள்ளவேண்டும். மேலும் இக் காணி உள்ளூராட்சி மன்றங்களின் பொதுத்தேவைகளுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது **(vesting)** என்பதையும் இச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படும்.


❋ உரிமையாளர் சான்றிதழ் **(Ownership Certificate)**

ஒரு காணியின் விபரங்கள் பொதுவாக உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள ஆவணங்களில் இருக்கும். காணிக்கு வரி செலுத்தும்போது விபரங்கள் அதில் பதியப்படும். ஒரு நொத்தாரிசு மூலம் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து இச் சான்றிதழைப் பெறலாம். கொழும்பு மாநகர சபையைப் பொறுத்தமட்டில் உரிமையாளர்/ கட்டடக்காரர் **(developer)** உரிய விண்ணப்பத்தை கொழும்பு மாநகர சபையின் வரி மதிப்பீட்டாளர் பிரிவில் சமர்ப்பித்து சான்றிதழைப் பெறலாம்.

❋ சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் இசைவுச் சான்றிதழ்கள் **(Clearance)** சேவை வழங்கும் நிறுவனங்களான இலங்கை மின்சாரசபையின் இசைவுச் சான்றிதழ், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இசைவுச் சான்றிதழ். கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசமானால் கொழும்பு மாநகர சபையின் நீர் வழங்கல் வடிகாலமைப்பு பிரிவில் பெற்ற வடிகாலமைப்பு இசைவுச் சான்றிதழ் தீத்தடுப்புப் பிரிவிடம்பெற்ற இசைவுச் சான்றிதழ், திண்மக் கழிவுப் பொருட்கள் அகற்றும் பிரிவிடம் பெற்ற இசைவுச் சான்றிதழ் போன்றவை பெறப்படல் வேண்டும். இச் சான்றிதழ்களை வழங்கும் பிரிவுகள் பொதுவாக உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தே தொழிற்படுகின்றன.




பல சந்தர்ப்பங்களில் Building line மற்றும் Street line ஒன்றுடன் ஒன்று பொருந்தும்




இவற்றைவிட தொடர்மாடிக் கட்டடம் நிர்மாணிக்க அனுமதி வழங்குமுன் பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். ஊனமுற்றோர்களுக்காக தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதா? மரத்தினால், பஸ் நிறுத்தும் இடத்தினால் அல்லது மின்சார, தொலைபேசி தூண்கள் மற்றும் வேறு தூண்களினால் வழிக்கு இடையூறு உண்டா? அவசரதேவைக்கு மின்வழங்கி கருவி **(Standby Generator)** வைக்கப்பட்டுள்ளதா? மின்விநியோக இயந்திரம் **(Transformer)** பொருத்தப்பட்டுள்ளதா? மின் உயர்த்தி **(Lifts)** பொருத்தப்பட்டுள்ளதா? வெளிப்புற நீர் வடிவதற்கான ஏற்பாடுகள், மலசல கழிவு அகற்றுவதற்கான ஏற்பாடுகள், கழிவு நீர் வடிவதற்கான ஏற்பாடுகள் போன்றவையாகும்.

❋ கொழும்பு மாநகரசபையில் அபிவிருத்தி அனுமதி **(Development Permit / Building Permit)** பெறுவதற்கு விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்.

❖ கட்டட வரைபடத்தின் **(Building Plan)** 6 பிரதிகள்,

❖ 6 மாதகாலத்துக்குள்பெறப்பட்ட காணி உரிமைச் சான்றிதழ் **(Ownership Certificate)**

❖ 2009ஆம் ஆண்டுக்குப்பின் பெறப்பட்ட வீதிக் கோட்டுச் சான்றிதழ் **(Street line Certificate)**

❖ கட்டடக் கோட்டுச் சான்றிதழ் **(Building line Certificate)**

❖ வடிகால் மற்றும் வெளிப்புற நீர் /வெள்ளநீர் வடிவதற்கான ஏற்பாட்டுச் சான்றிதழ் **(Drainage and Storm Water Clearance)**

❖ நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் பெற்ற சான்றிதழ்

❖ தீத்தடுப்பு சம்பந்தமான சான்றிதழ் **(Fire Clearance)**

❖ திண்மக் கழிவுப் பொருட்கள் அகற்றுவது சம்பந்தமான சான்றிதழ்

❖ மலசல கழிவு அகற்றுவது சம்பந்தமான சான்றிதழ்

❖ கழிவு நீர் வடிவதற்கான சான்றிதழ்

❖ சோலை வரிகள் செலுத்தியதற்கான சான்றிதழ்

❖ கட்டடம் அமையும் பிரதேசம்/இடம், கட்டடத்தின் உயரம் என்வற்றைப் பொறுத்து வேறு சான்றிதழ்கள்


அதன் பின்னர் கொழும்பு மாநகரசபையின் தகுதி வாய்ந்த அதிகாரிகள் குறித்த இடத்தைப் பரிசோதிப்பார். அதன்பின்னர் கட்டடம் நிர்மாணிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

கட்டடம் நிர்மாணம் தொடங்குமுன் வீதிக் கோடு **(Street line)** /கட்டக் கோடு **(Building line)** நிலத்தில் குறிக்கப்படல் வேண்டும்.

(தொடரும்...)

# கோத்தா தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை

## சிறிநேசன் கூறுகிறார்



**(கொழும்பு)**

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், அவர் வெற்றி பெறுவதற்கான எந்தவித வாய்ப்பும் இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தன்னாமுனை வீடமைப்பு கொலணிக்கு செல்லும் வீதி புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எந்தவகையிலும் சிறுபான்மை சமூகத்தின் மனதை வெற்றிகொள்ளவில்லையென்றும் இனங்களிடையே மதங்களிடையே பிரித்தாளும் தந்திரங்களை பயன்படுத்தி சிலர் குளிர் காய நினைப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (7)

# வெல்லவாய தள வைத்தியசாலையின் புதிய சிறுநீரக பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது



மொனராகலை மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கும் மருத்துவ சேவைகளை மேம்படுத்துவதற்கும் 36 மில்லியன் ரூபா செலவில் வெல்லவாய தள வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுநீரக நோய் சிகிச்சை மற்றும் குருதி மாற்று சிகிச்சை பிரிவு நேற்று முன்தினம் நண்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையில் சிறுநீரக நோய் அச்சுறுத்தல்கள் காணப்படும் 11 மாவட்டங்களில் மொனராகலை மாவட்டமும் உள்ளடங்குகின்றது. மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சுமார் 1500 சிறுநீரக நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் "நாட்டுக்காக ஒன்றிணைவோம் செயற்றிட்டத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலும் 23 மில்லியன் ரூபா செலவில் 47,500 குடும்பங்களுக்கு ஒரு நாளைக்குத் தேவையான 190,000 லீற்றர் சுத்தமான நீரை பெறக்கூடிய வகையில் 19 நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகளை ஸ்தாபித்தல், குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளர்களின் குடும்பங்களுக்கு நச்சுத்தன்மையற்ற உள்நாட்டு அரிசி வழங்குதல், மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல், அச்சுறுத்தல் வலயங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் 2250 குடும்பங்களுக்கு புதிய நீர்ப் பம்பிகளை வழங்குதல், சிறுநீரக நோயாளர்களை முன்கூட்டியே கண்டறிவதற்கான மருத்துவ முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

நேற்று முன்தினம் நண்பகல் வெல்லவாய தள வைத்தியசாலைக்கு சென்ற ஜனாதிபதி, நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து சிறுநீரக நோய் சிகிச்சை மற்றும் குருதி மாற்று சிகிச்சைப் பிரிவை மக்களிடம் கையளித்தார்.

வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார். (7)

# காட்டு யானைகள் தொல்லை மட்டு.மக்கள் பெரும் அச்சத்தில்

(கிரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ள காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் ஒரு வாரத்தில் மூன்று உயிர்கள் பலியாகியுள்ளன.

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளிலே அதிகமான காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கடந்த புதன்கிழமையும், வெள்ளிக்கிழமையும் காட்டு யானைகள் தாக்கியதில் மூன்று பேர் பரிதாபகரமாக பலியாகியுள்ளனர்.

இதனால் எல்லைப்புறங்களில் வசிக்கும் மக்களிடையே மிகுந்த அச்சம் நிலவுகின்றது. இப் பகுதியிலுள்ள மக்களின் வீடுகள், சொத்துக்கள், தோட்டங்கள் என்பனவும் காட்டு யானைகளினால் சேதங்களுக்குள்ளாகி வருகின்றன. இப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எல்லைப் பகுதியில் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அதிக வெப்பத்துடனான காலநிலை நிலவும்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் அதிக வெப்பத்துடனான வானிலை நிலவும் என, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குறித்த பிரதேசங்களிலுள்ள மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே தெரிவித்துள்ளது.

அதிக வெப்பம் நிலவும் சந்தர்ப்பங்களில் அதிகமாக நீரை அருந்துமாறும் நிழலான இடங்களில் இளைப்பாறுதல், வெளிர் நிற ஆடைகளை அணிய வேண்டும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சிறிதளவான மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சீரான வானிலை தொடர்ந்தும் நிலவும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (7)

# 'டப்' வழங்கும் நடவடிக்கை இரு வாரத்துக்குள் ஆரம்பிக்கப்படும்- அகிலவிராஜ் காரியவசம்



(கொழும்பு)

தேசிய பாடசாலைகளிலுள்ள உயர் வகுப்பு மாணவர்களுக்கு இலவச டப் கணனி வழங்கும் முதலாம் கட்ட நடவடிக்கை இன்னும் இரண்டு வாரத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஹொரணயிலுள்ள வித்தியாரத்ன பல்கலைக்கழக பீடத்தின் புதிய கட்டடமொன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் எதிர்பார்க்காத விதத்தில் உலகம் மாறிக் கொண்டு செல்கின்றது. அந்த மாற்றத்துடன் எமது சம்பிரதாயங்களுக்கும் மதிப்பளித்து முன்னேறிச் செல்வது அத்தியாவசியத் தேவையாகவுள்ளது.

இந்த மாற்றத்திற்கு முகம் கொடுப்பதற்கு முன்னெடுத்துள்ள திட்டங்களில் ஒன்றாகவே இந்த டப் கணனி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (7)



**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 109 ஆவது நிறுவுனர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த 4 ஆம் திகதி அதிபர் எஸ்.இரத்தினகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.**

**(படங்கள்:- பொற்பதி செய்தியாளர்)**

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

வென்னப்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தோப்புவ சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் கார் ஒன்றும் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

26 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் இச் சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்களில் தெரிய வந்துள்ளது. (7)

# புதிதாக சமுர்த்தி வங்கியில் அங்கத்தவராக இணைந்து கொள்ளும் பயனாளிகளுக்கான தெளிவூட்டல்

இவ்வருடம் யாழ். மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 23011 குடும்பங்கள் புதிதாக சமுர்த்தி நலனுதவி பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நலனுதவி உரித்துப் படிவம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் ஏற்கனவே சமுர்த்தி வங்கியில் கணக்குகளை ஆரம்பித்து அங்கத்தவர்களாகி செயற்பட்டு வருகின்றனர். இதன்மூலம் அவர்கள் வங்கியில் குறைந்த வட்டியில் கடன்பெற்று நன்மையடைந்து வருகின்றனர். ஆயினும் இவ் 23011 பயநுகரிகளில் ஓர் குறித்த தொகையினர் சமுர்த்தி வங்கியில் தம்மை ஓர் அங்கத்தவராக இணைத்துக்கொள்ளத் தவறியுள்ளனர். இவர்கள் தற்போது மாதாந்தம் வழங்கப்படவிருக்கும் சமுர்த்தி உதவு தொகையினை பெறும் பொருட்டு சமுர்த்தி வங்கியில் தம்மை அங்கத்தவராக இணைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்களை சமுர்த்தி வங்கியில் நடைமுறையில் உள்ள முக்கிய 4 கணக்குகளை ஆரம்பிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. அவையாவன,

1.குழுக்கணக்கு
2.பங்குக் கணக்கு
3.அங்கத்தவர் கணக்கு
4.கட்டாய சேமிப்புக் கணக்கு

### குழுக்கணக்கு

வருமானம் குறைந்த 5 உறுப்பினர்கள் கூட்டாகச் சேர்ந்து இக்கணக்கை ஆரம்பிக்க முடியும். இக்கணக்குகள் குழுக்களின் பெயர்களில் ஆரம்பிக்கப்படும். குழு உறுப்பினர்களால் வாராந்தம் சேமிக்கப்படும் தொகை இக்கணக்கில் வைப்புச் செய்யப்படும். இக்கணக்குகளின் மீதியின் அடிப்படையில் கடன்தொகை தீர்மானிக்கப்படும். கடன்தொகையின் 25 வீதம் குழு மீதியாக இருத்தல் வேண்டும். இக்கணக்குகளுக்கு 4 மாதங்களுக்கு ஒரு தடவை 5 வீத வட்டி வழங்கப்படும். குழுவின் தீர்மானத்தின் படி எழுத்து மூல அறிவித்தல் கொடுப்பதன் மூலம் சேமிப்புப் பணத்தையும் வட்டியையும் மீளப்பெறலாம்.

### பங்குக் கணக்கு

சிறுகுழுவில் அங்கத்துவம் பெற்றவர்கள் மட்டுமே இக்கணக்கை ஆரம்பிக்க முடியும். இக்கணக்கை ஆரம்பிப்பதற்காக ஆரம்ப வைப்பு தொகை 10/= போதுமானது. ஒரு பங்கின் பெறுமதி 500/= ஆகும். இதனை மாதாந்தம் சேமித்து ஒரு வருடத்தினுள் பூர்த்தி செய்தல் வேண்டும். ஒருவர் எத்தனை பங்குகளையும் கொள்வனவு செய்ய முடியும். தற்போது வருடத்திற்கு 5 வீத வட்டி வழங்கப்படும் அல்லது வங்கி இலாபம் உழைக்கும் சந்தர்ப்பத்தில் 25 ரூபாவிற்கு மேற்பட்ட தொகை வருடாந்தம் பங்கிலாபமாக வழங்கப்படும். 500/= பெறுமதியான பங்கினைக் கொள்வனவு செய்த ஒருவரே வங்கியில் நிர்வாகத்தில் பங்குகொள்வதுடன் கடன் பெறவும் முடியும். கணக்குடையோன் இறந்து விட்டால் அல்லது உரிய பிரதேச செயலர் பிரிவினை விட்டுச் சென்றால் அல்லது திட்டத்தில் இருந்து விலகும் சந்தர்ப்பத்தில் மட்டுமே இப்பணம் மீளளிப்புச் செய்யப்படும்.

### அங்கத்தவர் வைப்புக் கணக்கு

குழுக்கணக்கு, பங்குக் கணக்கு ஆகியவற்றை ஆரம்பித்த ஒருவரே இக்கணக்கை ஆரம்பிக்க முடியும். இக்கணக்கை 10/= ஆரம்ப வைப்புச் செய்து ஆரம்பிக்க முடியும். இக்கணக்கின் வைப்பிற்கு தற்போது 4 மாதங்களுக்கு ஒரு தடவை 5 வீத வட்டி வழங்கப்படுகிறது. இக்கணக்கில் இருந்து விரும்பிய நேரத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். பங்கிற்கு கிடைத்த வட்டி அல்லது பங்கு இலாபம், சமுர்த்தி நிவாரண உதவு தொகை, சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு உதவு தொகை, வீட்டு லொத்தர் பணம், அங்கத்தவர்களின் சுய சேமிப்புப் பணம் போன்றவை இக்கணக்கில் வைப்பு செய்யப்படும்.

### கட்டாய சேமிப்பு

இக்கணக்கு ஓர் கூட்டுக் கணக்கு ஆகும். இக்கணக்கானது சமுர்த்தி நிவாரண உதவு தொகை பெறுவோருக்கென மட்டுப்படுத்தப்பட்ட கணக்கு ஆகும். இக்கணக்கை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப வைப்புத்தொகை ஏதும் தேவையில்லை. அரசினால் வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவில் ஒரு பகுதி கட்டாய சேமிப்புக் கணக்கில் மாதாந்தம் வைப்புச் செய்யப்படும். இக்கணக்கு வைப்பிற்கு வருடத்திற்கு ஒருதடவை 7 வீத வட்டி வழங்கப்படும் 48 மாதங்களின் பின்பு கல்வித்தேவை, மருத்துவத்தேவை போன்ற காரணங்களிற்காக பிரதேச செயலரின் அனுமதியுடன் மீளப்பெறமுடியும்.

சமுர்த்தி வங்கியின் முக்கிய நோக்கம் அவர்களிற்கு குறைந்த வட்டியிலான கடன்களை வழங்கி வருமானத்தை உயர்த்துவதன் ஊடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்வதாகும்.

எனவே சமுர்த்தி வங்கியில் நிவாரண உதவு தொகையினை மட்டும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அங்கத்தவராக சேராது சமுர்த்திவங்கியால் வழங்கப்படும் குறைந்த வட்டியிலான கடன்களைப் பெற்று பயன்பெறவேண்டும்.

சமுர்த்தி வங்கியில் தற்போது 6%-14% வரையான வட்டியில் பல கடன் வகைகள் நடைமுறையில் உள்ளன. இவை தொடர்பாக வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிய முடியும்.

மேற்படி கணக்குகளில் அங்கத்தவர்கள் சமுர்த்தி வங்கிக்கு நேரடியாகச் சென்று வைப்புக்களைச் செய்ய முடியும். களப்பணி உத்தியோகத்தர்களிடம் வைப்புக்களை கையளிக்கும் போது கட்டாயம் அவர்களிடமிருந்து களப்பெறுவனவு பற்றுச்சீட்டினைப் கேட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகத்தர்களிடம் பணம் செலுத்துதல் தவறானதாகும்.

## முதியவர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை

கல்முனைப் பகுதியில் முதியவர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த புஞ்சி அப்பு கந்தசாமி (வயது-65) என பொலிஸார் குறிப்பிட்டனர்.

நோய்த் தாக்கத்தின் காரணமாகவே குறித்த நபர் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## மேலதிகக்கொடுப்பனவு பெற்றுக்கொடுக்கப்படும்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 50 ரூபா நாளாந்த மேலதிக கொடுப்பனவு வெகுவிரைவில் பெற்றுக் கொடுக்கப்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.அரவிந்த் குமார் தெரிவித்துள்ளார்.

நேற்று பதுளையில் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1770

### சிந்துரன்

குழந்தைக்கு வாங்கி வைச்ச கிரேப் வோட்டர் யாருக்கும் தெரியாமல் ஒரு மூடி ஊற்றிக் குடிச்சவர்களுக்குத்தான் தெரியும்... ஆஹா என்ன டேஸ்ட்



### ஸ்ரேயா

ஆயிரம் புகைப்படங்கள் பார்த்துக் கண் கலங்கி இருக்கிறேன்... ஆனால் கண்ணீரை வரவைத்தது இந்த புகைப்படம் மட்டுமே



### நவீன்

மூணும் மூணும் சேர்ந்தா என்ன வரும்னு கேட்டாங்க... ஆறுன்னு சொன்னேன். ஆறும் ஆறும் சேர்ந்தா என்ன வரும்னு கேட்டாங்க... வெள்ளம் வரும்னு சொன்னேன் அதுக்குப் போய் வெளிய நிற்க வைச்சுட்டாங்க மிஸ்



### விஷ்வா

மச்சான் வேளாவேளைக்கு சாப்பிடனும் ஆனால் வேலைக்கே போகாம சாப்பிடனும்... அப்ப நீ பிக்போஸ் வீட்டுக்குத்தான்டா போகனும்



### ராமு

திருமண புகைப்படத்தைப் பார்த்ததும்
மகன்: உங்க பக்கத்தில யாருப்பா. அவங்க செம கியூட்டா நிக்கிறாங்க
அப்பா: அது உன் அம்மாடா மகனே
மகன்: அப்புறம் எதுக்குப்பா இந்த குண்டு பொம்பளையோட வாழ்ந்திட்டிருக்கீங்க?



### சுபாஸ்

முகத்தில கிலோ கணக்கில சுண்ணாம்பு பூசினா மட்டும் போதாது கொஞ்சமாவது நடிக்கனும்... சும்மா பொண்டாட்டி பொண்டாட்டின்னு கூவிட்டு இருக்கக்கூடாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சோபா உடன்படிக்கை காரணமாக இலங்கை சட்டதிட்டங்கள் புறந்தள்ளப்படும் அபாயம்

## சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் அச்சம்

(கொழும்பு)

**சோபா உடன்படிக்கை காரணமாக இலங்கை சட்ட திட்டங்கள் புறந்தள்ளப்பட்டு அமெரிக்க சட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளதாக பொதுஜன பெரமுன முன்னணியின் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் அதுல த சில்வா அச்சம் வெளியிட்டுள்ளார்.**



சோபா உடன்படிக்கை குறித்து நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அதுல த சில்வா மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "சோபா உடன்படிக்கை என்பது அமெரிக்காவுடன் இணைந்து இலங்கை இராணுவம் செயற்படுவதற்கு கைச்சாத்திடும் ஒப்பந்தமாகும்.

அதேபோன்று அக்சா உடன்படிக்கை கடந்த 2007 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டு 2017ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு அதிக பயனை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மிலேனியம் கோபரசன் உடன்படிக்கையும் இலங்கைக்கு பயனற்ற ஒன்றாகும். ஆனால் அதிலும் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.


அந்த வகையில் சோபா உடன்படிக்கை ஊடாக இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் அமெரிக்க இராணுவம் பிரவேசிக்கும் நிலைமை ஏற்படும்.

திருகோணமலை- கொழும்புத் துறைமுகங்களும் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வாய்ப்புள்ளது.

அந்தவகையில் மக்களுக்கு இவ்விடயங்கள் புரிவதில்லை. நாட்டில் இரு விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கும்போதே அதனை அவர்கள் உணர்வார்கள்" என அதுல த சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (7)

# தலைவர் பிரபாகரன் தொடர்பில் ஜனாதிபதியின் கருத்து தமிழ்ச் சமூகத்தைக் கொச்சைப்படுத்தும் செயலாகும்

## இராதாகிருஷ்ணன் கவலை



"தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தானது தமிழ்ச் சமூகத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும்" என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வீ. இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய மாகாண ஹங்குராங்கெத்த எலமுல்ல கபரகல தமிழ் வித்தியாலயத்திற்கான வகுப்பறைக் கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான இராதாகிருஷ்ணனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"போதைப்பொருள் விற்பனை தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் வருமானமாக இருந்தது. போதைப் பொருள் வர்த்தகத்தின் மூலம் தான் அவர் ஆயுதங்களை வாங்கிப் போர் நடத்தினார்" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் அறிவித்திருந்தார்.

"போதைப்பொருட்களை ஒழித்துக்கட்டுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். இதற்கு நாமும் முழு ஆதரவையும் வழங்க தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால் அவர் கடந்த வாரம் வெளியிட்ட கருத்து தான் எமக்கு மனக்கவலையை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அவர்களையும், போதைப்பொருள் வர்த்தகத்தையும் தொடர்புபடுத்தி குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. தமிழ் மக்களை கொச்சைப்படுத்தும் செயலாகவே பார்க்கின்றோம்.

போதையை ஒழிக்க வேண்டும். ஜனாதிபதியின் கொள்கை சரியானது. ஆனால் அதனை மையப்படுத்தி தமிழ் மக்களின் மனங்களை புண்படுத்தும் விதத்தில் கருத்து வெளியிடக்கூடாது." என அமைச்சர் இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார்.(7)

# பொலிஸ்மா அதிபரிடம் விசாரணை நடத்த அனுமதி!



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு நார ஹன்பிட்டிய பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவிடம் வைத்தியசாலைக்குச்சென்று வாக்குமூலம் பெறுவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக் களத்திற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. கோட்டை நீதிமன்ற நீதவான் ரங்க திசாநாயக்க இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் மின்தூக்கி செயற்பாட்டாளராக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2017 ஆம் ஆண்டு அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பாகவே அவரிடம் வாக்கு மூலம் பெறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# செய்தித்துளிகள்

## உள்நாட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(றக்குவானை)

றக்குவானை கோரளைகம பிரதேசத்தில் உள்நாட்டுத் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் றக்குவானை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து உள்நாட்டு தயாரிப்புத் துப்பாக்கி ஒன்று, ரி-56 ரக துப்பாக்கித் தோட்டாக்கள், 434 கிராம் வெடி மருந்து உள்ளிட்ட சில பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கோரளைகம பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## நகைக்கடையொன்றில் தீ



மட்டக்களப்பில் நகைக்கடை ஒன்றில் நேற்று அதிகாலை தீ பரவியுள்ளது.

தீப் பரவல் தொடர்பில் வழங்கப்பட்ட தகவலுக்கமைய பொலிஸார் மட்டக்களப்பு நகர சபையின் தீயணைப்பு பிரிவு மற்றும் மின்சார சபை அதிகாரிகளின் உதவியுடன் தீயணைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

தீப் பரவல் காரணமாக உயிர் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## போலி நாணயத் தாளுடன் ஒருவர் கைது

ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் நபர் ஒருவரை. தம்புள்ளை பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

தம்புள்ளை - மரிஸ்கோனியாவ சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு மினிபஸ்ஸில் பயணித்து எரிபொருளை நிரப்பியதன் பின்னர், போலி நாணயத்தாளை வழங்கியுள்ளார்.

இதன் பின்னரே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 130 | 130 | 120 |
| பச்சைமிளகாய் | 420 | 400 | 400 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 110 | 160 | 180 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 180 | 200 | 180 |
| பூசணி | 140 | 140 | 140 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 180 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 190 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 |
| பயற்றங்காய் | 170 | 150 | 180 |
| லீக்ஸ் | 70 | 90 | 90 |
| பீற்றூட் | 80 | 70 | 80 |
| கறிமிளகாய் | 300 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 240 | 200 | 280 |
| போஞ்சி | 110 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | – | 70 |
| கீரை -1பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 40 | 30 |
| இராசவள்ளி | 100 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 220 |
| முள்ளங்கி | 40 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 110 | 50 | 60 |

# சிறுவர் அரங்கம்

## நாட்டுப்பற்று



முன்னொரு காலத்தில் மணிவர்மன் என்னும் மன்னர் மதுரையை சீரும் சிறப்புமாக ஆட்சி புரிந்து வந்தார். அவனுடைய மனைவி ராணி பத்மாவதி மீது உயிரையே வைத்திருந்தார். அந்நாட்டு மக்கள் தங்கள் அரசனையும் அரசியையும் மிகவும் நேசித்தனர். எங்கும் பசுமையும் வளமையும் குடிகொண்ட அந்த நாட்டில் மக்களுக்கு எந்தக் ஒரு குறையும் வைக்காமல் மன்னன் ஆட்சி செய்து வந்தார்.

மக்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் அரசன், அரசி இருவருக்கும் மனதுக்குள் ஒரு பெரும் குறை இருந்தது. திருமணமாகி, பல ஆண்டுகள் ஆகியும் தங்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்பதுதான் அது. எதிர்காலத்தில் தங்கள் நாட்டை ஆள ஒரு வாரிசு இல்லையே என மக்களும் மிகவும் கவலைப்பட்டார்கள். ராணி கலங்கும்போதெல்லாம் மன்னன் அவரை சமாதானம் செய்துவந்தார்.

ஒரு நாள் மதுரை மாநகருக்கு முனிவர் ஒருவர் விஜயம் செய்தார். மன்னரும் மகாராணியும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தனர். முனிவரின் காலில் விழுந்து வணங்கி, தங்கள் குறையை அவரிடம் தெரிவித்தனர். முனிவர் மன்னரை நோக்கி, "இந்நாட்டு மக்களில் யாராவது ஒரு தாய், தான் பெற்ற ஒரே குழந்தையை வைகை நதிக்கு அர்ப்பணித்தால் உனக்குக் குழந்தை பிறக்கும்" என்று கூறினார்.

அதைக் கேட்டதும் மன்னரும் ராணியும் அதிர்ச்சி அடைந்தனர். எந்த ஒரு தாயும் இதற்கு ஒத்துக்கொள்வது என்பது இயலாத காரியம் என்று நினைத்து இருவரும் தயங்கினர். முனிவரும் "இதைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறி அங்கிருந்து சென்றார்.

மன்னர் அமைச்சரை நோக்கி, "யாரேனும் ஒரு தாய், தான் பெற்ற ஒரே குழந்தையை வைகை நதிக்கு அர்ப்பணித்தால், நாட்டில் பாதி பரிசாக அளிக்கப்படும்" என்று முரசு அறிவிக்கச் சொன்னார். நாடெங்கும் முரசு அறிவிக்கப்பட்டது. ஆயினும் மக்களில் எந்தத் தாயும் தங்களுடைய குழந்தையை ஆற்றில் விடுவதற்கு முன்வரவில்லை.

நாட்கள் பல கடந்தன. அரசனும் அரசியும் மிகவும் சோர்ந்துபோயினர். அரசனின் உடல் நிலை இக் கவலையால் மிகவும் பாதிக்கப்பட்டது. அரசனும் அரசியும் கவலைப்படுவதை அரசனின் மெய்க்காப்பாளன் வேலப்பனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவனுக்கு ஓர் ஆண் குழந்தை இருந்தது. பிறந்து ஒரு வருடமே ஆகியிருந்த அக் குழந்தையை வேலப்பனும் அவனது மனைவி ரத்னாவும் மிகவும் நேசித்தனர்.

சில நாட்கள் சென்றன. கவலையினால் மன்னர் நோயுற்று, படுத்த படுக்கையானார். அரசன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்த வேலப்பனால் இந்தத் துயரைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு குழந்தையின்றி, மன்னர் படும் வேதனையைப் பார்க்கச் சகிக்காமல் ஒரு முடிவுக்கு வந்தான். வீட்டுக்குச் சென்று தன் மனைவி ரத்னாவை அழைத்தான்.

"குழந்தையில்லாத ஏக்கத்தில் நம் மன்னர் இறந்துவிட்டால், பின்னர் நம் நாடு, சரியான தலைமையில்லாமல் பகைவர்களின் கையில் சிக்கி, அடிமையாகிவிடும்" என்றான்.

"அதற்கு நாம் என்ன செய்வது?" என்றாள் ரத்னா.

"நம் நாட்டைக் காப்பாற்ற நாம் ஒரு தியாகம் செய்யவேண்டும். நமது குழந்தையை வைகை ஆற்றுக்கு அர்ப்பணிக்க வேண்டும்" என்றான்.

ரத்னா இதைக் கேட்டதும் அதிர்ச்சியில் மயங்கும் நிலைக்குச் சென்றாள். குழந்தையைப் பிரிவது - அதுவும் ஆற்றில் விடுவது என்பதை அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆயினும் குழந்தையை விட நாடும், மன்னரும் மிக முக்கியம் என்பதைப் பலவாறு தன் மனைவியிடம் எடுத்துச் சொன்னான் வேலப்பன்.

கணவனின் வார்த்தையை மீறாத அவன் மனைவியும் கண்ணீரோடு அதற்குச் சம்மதித்தாள். மறுநாள் குழந்தையை எடுத்துக் கொண்டு ஆற்றுக்கு வந்தாள். நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டு எந்தவிதச் சலனமும் இல்லாமல் வைகை ஓடிக்கொண்டிருந்தது.

ரத்னா ஆற்றில் இறங்கி, கண்ணீரோடு கடைசியாய்த் தன் மகனை முத்தமிட்டாள். ஒரு மூங்கில் தட்டில் குழந்தையைக் கிடத்தி, ஆற்றில் விட்டாள். பிறகு கதறி அழுதவாறே வீட்டுக்குச் சென்றாள். இச் செய்தி அரசனுக்கும் அரசிக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வேலப்பனையும் ரத்னாவையும் அழைத்து, கண்களில் நீர் மல்க நன்றி தெரிவித்தனர். அவர்கள் இருவரையும் புகழ்ந்து, "வேலப்பா, நீங்கள் இருவரும் செய்திருக்கும் தியாகத்துக்கு இந்த நாட்டையே பரிசாக உங்களுக்குக் கொடுத்தாலும் ஈடு செய்ய முடியாது. ஆயினும் நான் அறிவித்தபடி இந்த நாட்டில் பாதியை உங்களுக்குப் பரிசாகத் தருகிறேன்" என்றார் அரசர்.

வேலப்பன் மன்னரை வணங்கி, "பிரபு! தாங்கள் அளிக்கும் பரிசுக்காக நாங்கள் இதைச் செய்யவில்லை. தாங்கள் மீதுள்ள அன்பினாலும் இந்த நாட்டின் மீது நாங்கள் வைத்திருக்கும் பாசத்துக்காகவும்தான் நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்தோம்" என்று கூறி, அரசன் அறிவித்த பரிசை ஏற்க மறுத்துவிட்டான்.

மன்னர் மிகவும் வற்புறுத்தியும் அவர்களிருவரும் பரிசை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. நாடே அவர்களின் தியாகத்தைப் போற்றிப் புகழ்ந்தது. சில நாட்களில் அரசி தாய்மைப்பேறு அடைந்தார். மன்னரும் மக்களும் மிகவும் மகிழ்ந்தனர். மாதங்கள் உருண்டோடின.

அரசிக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. செய்தியறிந்து நாடே திருவிழாக் கோலம் பூண்டது.

வேலப்பனும் ரத்னாவும் தங்கள் துக்கத்தை மறந்து, இந்த மகிழ்ச்சியில் பங்குகொண்டனர். அன்றிரவு ரத்னாவுக்குத் தன் குழந்தை ஞாபகம் வந்தது. வைகைக் கரைக்குச் சென்றாள். குழந்தையைத் தான் விட்ட இடத்துக்குச் சென்று நின்றுகொண்டு, மகன் நினைவில் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

அப்போது...திடீரென ஒருவர் ரத்னாவின் முன்னே குழந்தையோடு நிற்பது போலிருந்தது. கண்களைத் துடைத்துவிட்டு, ரத்னா உற்றுப்பார்த்தாள். மன்னருக்கு ஆசி வழங்கிய அதே முனிவர்தான். கையில் குழந்தையோடு நின்று கொண்டிருந்தார். அந்தக் குழந்தை, ரத்னாவின் குழந்தையேதான்.

ரத்னா வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் முனிவரைப் பார்த்தாள். குழந்தையை ரத்னாவிடம் கொடுத்த முனிவர், அவளைப் பார்த்து, "நீ குழந்தையை ஆற்றில் விட்டவுடன் நான்தான் எடுத்து வளர்த்து வருகிறேன். நீயும் உன் கணவனும் செய்த இந்த மாபெரும் தியாகத்தைப் பாராட்டுகிறேன். உங்கள் இருவருடைய நாட்டுப்பற்றை இந்த உலகம் உணரவே இதுபோல் செய்தேன். எதிர்காலத்தில் உன் மகன், இளவரசனுக்குத் துணையாக நின்று இந்த நாட்டைக் காப்பான்" என்று கூறி, ஆசி வழங்கினார்.

குழந்தையுடன் ரத்னா வீட்டுக்கு ஓடோடி வந்த மறுநிமிடம், இச் செய்தி காட்டுத்தீ போல் பரவியது. அரசனும் அரசியும் ரத்னாவுக்கு மீண்டும் குழந்தை கிடைத்ததை அறிந்து மிகவும் மகிழ்ந்தனர்.

அக் குடும்பத்தை அழைத்து, அரசவையில் உரிய மரியாதை தந்து கௌரவித்தனர். அவர்களின் நாட்டுப்பற்றை நாடே கௌரவித்தது.

## பொது அறிவுகள்

- சிரிக்கவும் உம்மென்றிருக்கவும் எத்தனை தசைகள் அவசியமாகின்றன?

  சிரிக்க - 17 தசைகள், உம் - 43 தசைகள்

- மனிதனை அடையாளம் காண கைரேகை பயன்படுகிறது. அதுபோல மாட்டை அடையாளம் காண பயன்படுவது எது?

  மூக்கு ரேகை

- கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி?

  (வௌவால்)

- ருத்ராட்சம் எத்தனை வகைப்படும்?

  38 வகைகள்

## விடுகதைகளும் விடைகளும்

- அந்தரத்து தொட்டிலில் ஆடுவார்கள், கூடுவார்கள். அவர்கள் யார்?

  தூக்கணாங் குருவிகள்

- அண்ணன் சுட்டெரிப்பான், தம்பி குளிர வைப்பான். அவர்கள் யார்?

  சூரியன், சந்திரன்

- அவ்வப்போது நிரப்பலாம், மொத்தமாக நிரப்ப முடியாது. அது என்ன?

  வயிறு

- அவன் அன்னநடை நடந்தாலும் சும்மா அதிரும். அவன் யார்?

  யானை

- அண்ணன் தம்பி ஐந்து பேரு, அதில சின்னவன் இல்லாம பெரியவங்களால எதுவும் செய்ய முடியாது. யார் அவர்கள்?

  நமது கை விரல்கள்

பேரார்வம் இல்லாமல் பெரிதாக யாரும் எதையும் இவ்வுலகில் சாதித்ததில்லை

– டிரம்ப்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பலாலி விமான நிலையம் ஐயமற்ற வரமாக அமையட்டும்

பலாலி விமான நிலையத்தைப் புதுப்பொலிவுபடுத்தி இந்தியாவுக்கும் இதர பிராந்திய நாடுகளுக்குமிடையிலான விமான சேவையை நடத்துவதற்கான வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்திய மத்திய அரசின் நிதிப்பங்களிப்புடன் நடைபெறுகின்ற பலாலி விமான நிலையப் புனரமைப்புப் பணிகள், நிறைவு பெற்றதும் விமான சேவை ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவில் இருந்து பலாலிக்கும் விமானப் பயணத்தை மேற்கொள்வது நேர விரயத்தையும் பயணக் களைப்பையும் வலுவாகக் குறைக்கும்.

தவிர, தமிழகத்துச் சகோதரர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போகவும் வடபுலத்துத் தமிழ் மக்கள் தமிழகத்துக்குச் சென்று வருவதற்குமான சந்தர்ப்பங்கள் நிறையவே ஏற்படும்.

இது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய விடயம். யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியா செல்வதென்றாலும் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவதாக இருந்தாலும் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்துக்கே செல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு செல்வதாக இருந்தால் அல்லது அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவதாக இருந்தால், சுமார் பத்து மணித்தியாலங்களை வாகனப் போக்குவரத்தில் செலவிட வேண்டியுள்ளது.

கொழும்பில் இருந்து இந்தியாவுக்குச் செல்வதற்கான விமானப் பயண நேரம் வெறும் 60 நிமிடங்களாக இருக்க, கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைய பத்து மணித்தியாலங்கள் ஆகின்றது என்றால் பயணக் கஷ்ரம் எத்துணை என்பதைப் புரிய முடியும்.

எனவே இந்த இட்டல் இடைஞ்சல்கள் எதுவுமின்றி மிகக் குறைந்த நேரத்துக்குள் பலாலி விமான நிலையத்தைச் சென்றடையலாம் என்பது நல்ல கிடைப்பனவாகும்.

எனவே புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடையும்போது பலாலி விமான நிலையம் வட பகுதி மக்களுக்கான வரமாகும்.

எனினும் பலாலி விமானத் தளம் விஸ்தரிக்கப்படலாம். பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்படலாமென்ற ஐயம் இன்னமும் நீடிக்கிறது.

இந்த ஐயத்தை பலாலி விமான நிலையத்துக்கெனப் புதிதாக அமைக்கப்படும் நுழைவாயில் வலுப்படுத்தியுள்ளது.

அதாவது, இதுகாறும் பலாலி விமான நிலையத்தின் நுழைவாயில் கிழக்குப் பக்கமாகவே இருந்தது.

இவ்வாறு கிழக்குப் பக்கத்தில் நுழைவாயில் தொடர்ந்தும் இருக்குமாயின் அதற்கு முன்பாகவுள்ள ஏகப்பட்ட நிலப்பரப்புக் காணிகள், அவற்றின் உரிமையாளர்களுக்குக் கிடைக்க வாய்ப்புண்டு.

ஆனால் புதிய நுழைவாயில் மேற்குப் பக்கமாக அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இஃது கிழக்குப் பகுதியிலுள்ள காணிகள் சுவீகரிக்கப்படப் போகிறதோ என்ற ஐயத்தைத் தந்துள்ளது.

எனவே இது தொடர்பில் தெளிவான விளக்கத்தை வழங்குவது சம்பந்தப்பட்டவர்களின் தலையாய கடமையாகும்.

# நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே கட்சியிலிருந்தே வரவேண்டும்

## இராதாகிருஷ்ணன் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே கட்சியிலிருந்தே வரவேண்டும் என விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இல்லா விட்டால் நாட்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது என்பதுடன் அபிவிருத்தியையும் எட்டமுடியாது எனவும் தெரிவித்தார்.

விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று நாட்டில் அடுத்த ஜனாதிபதி யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. எல்லா கட்சிகளும் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சுதந்திரக் கட்சியில் ஜனாதிபதியும், மொட்டு கட்சியில் பிரதமரும் வர வேண்டுமென கூறுகின்றனர்.

ஆனால் மொட்டுக் கட்சியோ, தங்கள் கட்சியிலேயே ஜனாதிபதியும், பிரதமரும் வரவேண்டும் எனக் கூறுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தங்களுடைய கட்சியில் ஜனாதிபதியும் பிரதமரும் வர வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரே கட்சியிலிருந்தே ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இல்லாவிட்டால் இன்று நாங்கள் சந்திக்கின்ற இந்த பிரச்சினைக்கு என்றுமே தீர்வு காண முடியாது. நாட்டை அபிவிருத்தி செய்யவும் முடியாது.

எனவே ஒரே கட்சியிலிருந்து ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவு செய்யப்பட்டாலே நாட்டுக்கும் மக்களுக்கும் அது நன்மையாகவே அமையும் என அவர் மேலும தெரிவித்தார். (7)

# கம்பரெலியத் திட்டம் முறையாக நடந்தால் அடுத்த கட்டப் பணிகளுக்கு மேலதிக நிதி

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் நிறைவு செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சகல அமைச்சர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கம்பரெலிய வேலைத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள 200மில்லியன் ரூபா உரிய முறையில் செலவு செய்யப்பட்டதன் பின்னர் அடுத்த கட்டப் பணிகளுக்காக மேலும் நிதியொதுக்கித் தரப்படும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

என்டர் பிரைஸஸ் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் மத்திய தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் முதல் நடவடிக்கையின் போது காணப்பட்ட குறைபாடு நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் இடம் பெறாத வகையில், நடந்து கொள்ளுமாறும் பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் அபிவிருத்தி வேலைகளுக்கு மேலும் 'அதிகரித்துச் செயற்பட போதுமான அளவு நிதியொதுக்க தீர்மானித்திருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யர்ழ்.பிரதேசத்தில சில்லாலை, சாந்தை, இலங்கைதொலைத்தொடர்புநிலையம், மாலுசந்தி, பாரதி தாசன படிப்பகம், முத்து மாரியம்மன் கோவிலடி, நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், இலகடி, காந்தியூர், மந்திகை, காளி கோவிலடி, வதிரி, திக்கம், தேவரையாளி, இரும்பு மதவடி, மனோகரா, நெல்லியடி, விக்னேஸ்வரா, மாத்தோனி, நாவலர்மடம், தூதாவளை, கரணவாய் ஆசிரிய நிலையம், விழுந்த ஆலடி, கரவெட்டி இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், நெல்லியடி இலங் கை வங்கி, றூபின்ஸ் வைத்தியசாலை, 'ற்றன் நஷனல் வங்கிபிறைவேற் லிமிடட், வலயக் கல்விப்பணிமனை வடமராட்சி, நெல்லியடி கார்கில்ஸ் பூட்சிற்றி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில தலைமன்னார் கிராமம், படப்பாடி, தலைமன்னார் Palmyra house ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# திருக்குறள் வாரம் பிரகடனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலின் கீழ் ஆவணி (ஓகஸ்ட்) முதல் வாரம் திருக்குறள் வாரமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

உலக பொதுமறையான திருக்குறளுக்கு ஓர் உயரிய இடத்தினை வழங்கி அதன் பெருமையினை இலங்கையர் அனைவரும் அறிய வைக்கின்ற முயற்சியின் பிரகாரமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், இவ்வாறு ஆவணி முதல் வாரம் திருக்குறள் வாரமாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை வரலாற்றில் எந்தவொரு தலைவரும் எடுக்காத முயற்சியையே ஜனாதிபதி எடுக்கவுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் பல்வேறு சமயங்களுக்குப் பொதுவான அறநெறிகளைத் திருக்குறள் வலியுறுத்துவதன் பிரகாரம் தான் இந்த முயற்சியை ஜனாதிபதி எடுத்துள்ளார். தென்னிந்தியாவிலிருந்து முக்கிய அதிதிகளும் திருக்குறள் வார நிகழ்வுகளுக்காக அழைக்கப்படவுள்ளனர்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு உட்பட பல இடங்களில் இதற்கான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இசைச்கச்சேரிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், திருகோணமலையிலும் சில நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வருந்தாதே மனமே



❖ மனம் தான் மனிதவாழ்வின் விளைநிலம். அதை செம்மையாக வைத்துக் கொண்டால் வாழ்வு வளம் பெறும்.

❖ மனதை அடக்க நினைத்தால் அலையும். அதை அறிய நினைத்தால் அடங்கும். தவறு செய்வதும் மனம் தான். இனி தவறு செய்யக்கூடாது என்று தீர்மானிப்பதும் மனம்தான்.

❖ அன்றாடம் மனம் பலவிதமான விஷயங்களில் அலையவிட்டு தடுமாற்றம் பெறுகிறது. குறிப்பிட்ட நேரம் தியானம் செய்து மனதை தூய்மைப்படுத்தினால் மனநலம் மேம்பாடு அடையும்.

❖ வாழ்வில் இடையிடையே சிக்கல்கள் ஏற்படுவது இயற்கையே. அதைக் கண்டு மிரள்வது அறிவுடைமை ஆகாது. அவற்றை எப்படி எதிர்கொள்வது என்று சிந்தித்து தீர்வு காண்பதே சிறந்தது.

❖ கவலைப்படுவதால் மட்டுமே சிக்கலில் இருந்து மீளமுடியாது. இன்னும் சொல்லப்போனால் கவலையின்போது பிரச்னை மேலும் பெரிதாகிவிடும்.

❖ தீர்க்க முடியாத துன்பம் என்ற ஒன்று வாழ்வில் கிடையவே கிடையாது. தீர்க்கும் வழிவகைகளை அறியாமல் தான் நாம் துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறோம். திறக்க முடியாத பூட்டு எதுவுமில்லை. அதற்கான சரியான சாவியைத் தேடிப்பிடித்தால் போதும்.

# அரியாலை திருமகள் சனசமூக நிலைய உள்ளூர் ரீதியான துடுப்பாட்டத்தொடர்



அரியாலை திருமகள் சனசமூக நிலையம் 61வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அரியாலை ரீதியாக நடத்திய துடுப்பாட்ட தொடரின் இறுதிப்போட்டிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய-A அணி மற்றும் அரியாலை சனசமூக நிலைய அணிகள் நுழைந்துள்ளன. மேற்படி தொடரின் முதலாவது அரையிறுதி போட்டியில் அரியாலை சரஸ்வதி-B அணியினை வீழ்த்தி அரியாலை சனசமூக நிலைய அணியும் திருமகள் சனசமூக நிலைய அணியினை வீழ்த்தி சரஸ்வதி சனசமூக நிலைய அணியும் நுழைந்தமை குறிப்பிடத்தக்கது. (க)



# 5000 மீற்றர் ஓட்டம் வவு.மாணவன் தங்கம்



2019 ஆம் ஆண்டிற்கான வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகள போட்டியில் 2 ஆம் நாள் இடம்பெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 5000m ஓட்டப்போட்டியில் வவுனியாவின் கிராமப்புர பாடசாலையான வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயத்தின் மாணவன் எஸ்.சஞ்சீவன் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டுள்ளார். இவர் இத்தூரத்தினை 17நிமிடம் 7செக்கனில் ஓடிமுடித்து இந்த வெற்றியை பெற்றுள்ளார். பின்தங்கிய பாடசாலையில் வறிய குடும்பத்தில் பிறந்த இந்த மாணவன். தொடர் பயிற்சியினாலும் உடற்கல்வி ஆசிரியரினால் வழங்கப்பட்ட பயிற்சியினாலும் அதிபர்.ஆசிரியர்களின் ஒத்துழைப்புடனும் தான் இந்த வெற்றியை பெற்றதாக கூறினார்.இவ் வெற்றியானது பாடசாலைக்கு பல வருடங்களுக்கு பின் கிடைத்த வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது.(க-250)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# அவுஸ்திரேலியாவுக்கு மரண அடி; தென்னாபிரிக்கா ஆறுதல் வெற்றி



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தனது கடைசி லீக் போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி, ஆறுதல் வெற்றியுடன் உலக்கோப்பையை விட்டு வெளியேறியது.

நடப்பு உலகக்கோப்பை தொடரில் தென்னாபிரிக்கா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான போட்டி மான்செஸ்டரில் நேற்று முன்தினம் நடந்தது. அரையிறுதி வாய்ப்பை இழந்த தென்னாபிரிக்க அணிக்கு இது கடைசி லீக் போட்டியாகும்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய மார்க்ரம், டி காக் இருவரும் அபார ஆட்டத்தினை வெளிப்படுத்தினர். மார்க்ரம் 34 ஓட்டங்களிலும், டி காக் 52 ஓட்டங்களிலும் லயன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

பின்னர் கைகோர்த்த டூ பிளிசிஸ் மற்றும் வான் டர் டுசன் இருவரும் அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சை அடித்து நொறுக்கினர். இவர்களின் அதிரடியால் அணி யின் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது. கப்டன் டூ பிளிசிஸ் தனது 12 ஆவது ஒருநாள் சதத்தை விளாசிய நிலையில், பெஹெ ண்ட்ராஃப் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அவர் 94 பந்துகளில் 2 சிக்சர்கள், 7 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்கள் எடுத்தார். மறுமுனையில் சதத்தை நோக்கி சென்று கொண்டிருந்த வான் டர் டுசன் 95 ஓட்டங்களில் கம்மின்ஸ் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சதத்தை தவற விட்டார்.

இறுதியில் தென்னாபிரிக்கா அணி 6 விக்கெட் இழப்புக்கு 325 ஓட்டங்கள் குவித்தது. அதனைத் தொடர்ந்து, களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியில் ஆரோன் பிஞ்ச், ஸ்மித் ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

எனினும் டேவிட் வோர்னர் நங்கூரம் போல் நின்று விளையாடினார். ஸ்டோய்னிஸ் 22 ஓட்டங்களிலும், மக்ஸ்வெல் 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இந்நிலையில், அலெக்ஸ் கேரி தொடக்க வீரர் வோர்னருடன் இணைந்து மிரட்டினார்.

இதற்கிடையில் சதம் அடித்த வோர்னர், 117 பந்துகளில் 2 சிக்சர், 15 பவுண்டரிகளுடன் 122 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எனினும் தொடர்ந்து அதிரடி காட்டிய அலெக்ஸ் கேரி அரைச் சதம் விளாசினார்.

அணியின் ஸ்கோர் 275 ஆக இருந்தபோது, அலெக்ஸ் கேரி 85 ஓட்டங்களில் மோரிஸ் பந்துவீச்சில் அவுட் ஆனார். அவரைத் தொடர்ந்து கவாஜா (18), ஸ்டார்க் (16) இருவரும் ஆட்டமிழந்தனர்.

முடிவில் அவுஸ்திரேலிய அணி 49.5 ஓவர்களில் 315 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்தது. தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா 3 விக்கெட்டுகளும், பெலுக்வாயோ, பிரிட்டோரியஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

தென்னாபிரிக்காவுக்கு இது ஆறுதல் வெற்றியாக அமைந்தது. அதே சமயம் அரையிறுதியில் விளையாடவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு இது 2வது தோல்வியாகும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்







**2019 இற்கான வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே போட்டி 29,30 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் நடை பெற்றது. இதில் கலந்து கொண்ட கைதடி நவீல்ட் பாடசாலை கராத்தே ஆண், பெண் அணியினர் 1 வெள்ளிப்பதக்கம் உட்பட 8 பதக்கங்கள் பெற்றதோடு இரு அணியினரும் குழுக்காட்டா 3 ஆம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணங்களையும் பெற்று 2019 இற்கான தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். (க)**

## களுத்துறையில்...

அரசாங்கம் காட்டிக் கொடுக்க முயற்சிக்கின்றது. இதற்கு ஜே.வி.பி ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"நம்பிக்கையை மீறிய அரசாங்கமே உடனே வெளியேறு " என்ற தொனிப்பொருளில் களுத்துறையில் நேற்று இடம்பெற்ற பேரணியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 71 வருட காலத்திற்குள் பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நிலைமை இந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சட்டம், ஒழுங்கும் சீரழிந்துள்ளது. பாரிய கடன் சுமைக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் நாட்டை தொடர்ந்தும் கொண்டு செல்ல முடியாது என்றும் இதன்போது குறிப்பிட்டார். (3)

## மயக்க மருந்து...

தந்தவர்களும் தங்கியிருந்த நிலையில் அதிகாலை பின்பக்க யன்னலை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களிற்கு மயக்க மருந்தை விசிறிவிட்டு அவர்களின் கழுத்தில் இருந்த நகைகளை வெட்டி எடுத்ததுடன் சூட்கேசில் இருந்த பொருட்களையும் வெளியில் கொண்டு வந்து சல்லடை போட்டு தேடி எடுத்துள்ளனர்.

சுமார் 80 பவுண் தங்க நகைகள், 7000 பெறுமதியான வெளிநாட்டு பணம் மற்றும் சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான இலங்கைப் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

அயல் வீட்டில் இருந்த அலவாங்கு, மண்வெட்டி என்பனவே வீட்டில் கொள்ளையிடுவதற்காக பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மோப்பநாய் சகிதம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (3,60)

## எவராலும் நிறு...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் தயா எப்பரல் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற 10 இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் வைபவத்தில் பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

மக்களுடன் வீதியில் இறங்கி, போராட்டம் நடத்தி, மக்களுக்கு காணி உரிமை அவசியம் என்ற செய்தியை நாட்டுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

மக்களுக்கு காணிகளை சொந்தமாக வழங்கும் சட்டமூல வரைவை தயாரித்து அமைச்சரவை அனுமதியை பெற இரண்டு ஆண்டுகள் சென்றது. அந்த சட்டமூலத்திற்கு அனுமதி பெற்று, வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு காணிகளை சொந்தமாக வழங்குவதற்கு எதிராக இரண்டு அமைப்புகள் செயற்பட்டுள்ளன. இவர்கள் யார்? இந்த அமைப்புகள் என்ன? மக்களுக்கு காணிகளை வழங்குவதை எதிர்ப்போர் எதிரணியில் இருக்கின்றனர்.

மக்களுக்கு காணி உரிமைகளை வழங்குவதை நிறுத்த வழக்கு தொடர போகிறார்களாம். இந்த போராட்டத்தை கைவிட முடியாது. நாம் சிறிது தூரம் வந்துவிட்டோம். கடந்த முறை இப்படியான சட்டமூலத்தை முன்வைத்தபோது பலவகையில் எதிர்த்தனர். அப்போது சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும் நாங்கள் அரசாங்கமாகவும் இயங்கினோம்.

பல்வேறு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. முதலமைச்சர்கள் எதிர்த்தனர். அதனை தடுத்து நிறுத்தினர். எனினும் இம்முறை அதனை தடுத்து நிறுத்த இடமளிக்க முடியாது. இப்படியான புரட்சிகரமான திட்டங்களை தடுக்க முயற்சிக்கின்றனர் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (3)

## விசேட கட்சி...

வர்கள் கூட்டம் இன்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இன்று காலை 9.30 மணியளவில் இந்த கூட்டம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள காணி தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டம் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சட்டம் தொடர்பாக இதுவரையில் நீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அது குறித்து பாராளுமன்றத்தில் விவாதத்தில் எடுக்காமல் இருப்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. (3)

## பதவிக்காலத்தை...

பதி நாடியிருந்தார். 19வது திருத்தத்தின் பின்னர், தற்போதைய ஜனாதிபதிக்கும் 5 வருட பதவிக்காலமா அல்லது இனிமேல் பதவியேற்கும் ஜனாதிபதிக்கு 5 வருட பதவிக்காலமா என்ற குழப்பம் ஏற்பட்டிருந்தது.

தற்போதைய ஜனாதிபதிக்கும் 5 வருட பதவிக்காலம்தான் என உயர்நீதிமன்றம் விளக்கமளித்திருந்தது.

இந்தநிலையில், மீளவும் உயர்நீதிமன்றத்தை ஜனாதிபதி நாடவுள்ளார் எனத் தெரிகிறது.

ஜனாதிபதி பதவியேற்ற தினத்தில் இருந்து ஐந்தாண்டுகள் கணக்கிடப்படுமா அல்லது 19வது திருத்தத்தில் சபாநாயகர் கையொப்பமிட்ட தினத்தில் இருந்து ஜனாதிபதியின் பதவிக்காலம் கணக்கிடப்படுமா என்ற சந்தேகத்தை தீர்க்கவே, உயர்நீதிமன்றத்தை ஜனாதிபதி நாடவுள்ளார்.

ஒருவேளை, சபாநாயகர் 19வது திருத்தத்தில் கையொப்பமிட்ட தினத்தில் இருந்து ஜனாதிபதியின் பதவிக்காலம் தீர்மானிக்கப்படுமெனில், அடுத்தாண்டு மே மாதம் வரை மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவிவகிக்க முடியும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனாதிபதிக்கு சார்பாக வருமெனில், வரும் பெப்ரவரி அல்லது மார்ச்சில் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பார்.

இதேவேளை, இதையெல்லாம் கூட்டிக் கழித்து பார்த்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவிற்கிடையில் இரகசிய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

வரும் நவம்பரில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியாமல், நீட்டிக்கப்படுமானால் ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை சமர்ப்பிப்பதென இரண்டு தரப்பும் திரைமறைவில் உடன்பாடு எட்டியுள்ளன.

இரு தரப்பு உடன்பாட்டின்படி, பாராளுமன்றத்தையும் அடுத்த வருட தொடக்கத்தில் கலைப்பதென்றும் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. (3)

## 433 சாரதிகள்...

செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளர் காரியாலயம் இதனைத் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் விசேட சுற்றிவளைப்பு வேலைத்திட்டம் நேற்று முன்தினம் முதல் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (3)

## சக்தி வாய்ந்த...

கிழக்குப் பகுதியிலுள்ள சுலாவெசி வடக்கு கடற்பரப்பிலேயே சுமார் 6.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நேற்று இரவு 8.38 மணியளவில் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தையடுத்து கடலோர பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (3)

## இலங்கை சிங்...

கொண்டோம். கடந்த காலங்களில்விட்ட எச்சரிக்கைகளை பற்றி பேசாமல் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஒழிக்க நாம் செயற்பட வேண்டும்.

இன்று ஒரு பக்கம் சோபா உடன்படிக்கையால் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. மறுபக்கம் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் செயற்பாடு, இன்னொருபக்கம் பலம்வாய்ந்த உலக நாடுகளின் புலனாய்வுச் சேவைகள் நமது நாட்டை கூறுபோட செயற்படுகின்றன.

இது சிங்களவர்களின் நாடு. தமிழர்கள் இதனால் கோபிக்கக் கூடாது. எல்லாவற்றுக்கும் போல நாட்டுக்கு ஒரு சொந்தக்காரன் இருக்க வேண்டும். நாங்கள்தான் வரலாறு கட்டியெழுப்பிய இனம். நாங்கள் கள்ளத் தோணி அல்ல. உலகில் சிறுபான்மை என்றாலும் நாங்கள் கௌரவமான இனம்.

இன்று எமது வீட்டிற்குள் விசப் பாம்பு வந்துவிட்டது. வீட்டிற்குள் இருக்கும் பாம்பை நாங்கள் வெளியேற்ற வேண்டும். அதில் வீட்டுக்குள் எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் இந்த ஆண்டு மட்டும் இதுவரை 8 ஆயிரம் பேர் வரை உலகில் கொல்லப்பட்டுள்ளனர். அப்படியான அடிப்படைவாதம் இது.

நாம் உலமா சபையுடன் கவனமாக இருக்க வேண்டும். உலமாக்களுடன் பேசுவதை அரச தலைவர்கள் நிறுத்த வேண்டும். சுபி முஸ்லிம்கள் உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டு அவர்களுடன் பேச வேண்டும். அல் தக்கியா என்ற போர்வையில் உலமா சபை செயற்படுகிறது.

உலமா சபைக்கு இன்று பயங்கரவாதத்துடன் தொடர்புள்ளது. அவர்கள் இந்தோனேசியா, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்பில் உள்ளனர். 4 அமைப்புக்களுடன் தொடர்பில் உள்ளனர். இங்கே 40 வகையான மொழி பெயர்ப்புக்களுடன் குரான் உள்ளது. 1950ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்ட ஒரு குர் ஆன் உள்ளது. அந்த குர் ஆன் ஓரங்கட்டப்பட்டுள்ளது.

அரசுக்குள்ளே அரசு, சட்டத்திற்குள்ளே சட்டம், நீதிமன்றத்திற்கு வெளியே காதி சட்டம், வெவ்வேறான சட்டங்கள் உள்ளன. எந்த அரசு வந்தாலும் வஹாபிவாதிகள் அதில் உள்ளனர். அட்டுலுகமவில் இன்று தவ்ஹீக் ஜமாத் செயற்படுகின்றது. தலைக்கு மேலே பறந்து சென்றாலும் தலையில் கூடு கட்ட நாம் விடமாட்டோம்.

உலமாக்கள் இங்கு வெளியேறும் காலம் வெகு தொலைவில் இல்லை. இப்படியே சென்றால் நீங்கள் இங்கு இருக்க முடியாது. உலமாக்களின் கொஞ்ச வாக்குகளுக்காக எமது அரசியல்வாதிகள் அலைகின்றனர். சிங்கள அரசை அமைப்போம். சிங்களவர்கள் விரும்பும் அரசை ஏற்படுத்துவோம். பாராளுமன்றத்தில் சிங்களவர்கள் கோலோச்சும் நிலையை ஏற்படுத்துவோம். சிங்களவர்கள் முதுகெலும்புடன் இருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் இருக்கும் 225 பேரில் குற்றம் செய்யாதவர்களையே அதிகம் காண முடியாது. இனத்துக்கு தலைமை வழங்கக் கூடிய ஒரு அரசியல் கலப்பற்ற தலைவன் எமக்கு வேண்டும். ஜனநாயகத்தின் காப்பரணான பாராளுமன்றத்தில் செயற்படும் ஒருவரே தலைவராக இன்று தேவை. சிங்களவருக்கு ஏற்ற சட்டங்கள் தேவை. அது நமக்கான பாராளுமன்றமாக வேண்டும்.

காவிகளின் பலத்துடன் நாம் இந்த நாட்டை வெற்றியை நோக்கி கொண்டு செல்லலாம். நாட்டில் 10 ஆயிரம் விகாரைகள் உள்ளன. 7 ஆயிரம் விகாரைகளை நாம் ஒன்று சேர்த்தால் பிரிவினைகளை மறந்தால் நாம் எதிர்பார்க்கும் வாக்குகள் கிடைக்கும்.

நாங்கள் கல்வி பயின்று அனுபவத்துடன் தான் வந்துள்ளோம். எங்களால் இந்த நாட்டை நல்ல இடத்திற்கு கொண்டு செல்லலாம். 70 வருடம் இந்த நாட்டை வீணாக்கியவர்கள் வீட்டுக்கு செல்ல வேண்டும். ஆட்சியை கைப்பற்றுவது எமது நோக்கமல்ல. ஆனால் ஆட்சியாளர்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் எமக்கு இருக்க வேண்டும் என்றார். (3)

## கோத்தாவை...

துள்ளார்.

எம்புல்தெனிய மெக்ரின் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற பிவித்துரு ஹெல உறுமயவின் விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். மேலும் அவர்,

சிறையில் இருக்கும் போது தேர்தலில் வெற்றி பெறுவது மிகவும் இலகுவானது என்பது கடந்த கால அனுபவங்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும். இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து அப்படியான உதவி கிடைத்தால், மிகப்பெரிய உபகாரமாக இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்க கூடிய விரிவான கூட்டணியை உருவாக்க வேண்டும். அந்த கூட்டணியில் மைத்திரிபால சிறிசேனவை ஒரு கௌரவமான இடத்தில் வைக்க வேண்டும். அதற்கு உதவ தயாராக இருக்கின்றோம்.

ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிட வேண்டும். மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வர வேண்டும். பிவித்துரு ஹெல உறுமய கடந்த நான்கு ஆண்டுகளாக கூறி வரும் இந்த கருத்தை முழு நாடும் தற்போது ஏற்றுக்கொண்டு விட்டது.

எமக்கு எத்தனை அமைச்சு பதவிகள் கிடைக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கவனத்தில் கொள்ளாது. ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கும் விரிவான கூட்டணியை ஏற்படுத்துவது குறித்தே கவனம் செலுத்த வேண்டும் என்றார். (3)

### மகிந்தவின் ஆட்சியில்
## மக்கள் மத்தியில் சுதந்திரம் இல்லை
### என்கிறார் மனோ

(கொழும்பு)

மகிந்த ஆட்சி காலத்தில் இனவாதம் தலைதூக்கியிருந்ததாகவும் ஆனால் தற்போது நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் இருப்பதாக தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு - முகத்துவாரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (3)


கொவிசெத
திகதி 2019.07.07
சீட்டிழுப்பு இலக்கம் 2171
P 48 63 68 77

மஹஜன சம்பத
திகதி 2019/07/07
சீட்டிழுப்பு இலக்கம் 3954
W 1 9 7 1 0 0

நீரோகா லக்ன ஐய
திகதி 07/07/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0568
கடகம் 04 49 56 59

தன நிதானய
திகதி 2019-07-07
சீட்டிழுப்பு இலக்கம் 171
C 10 32 36 62

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 600/=
Germaney - 700/=
France - 700/=

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
**0777 554 528**
(C-6868)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
விசேட விலைக்கழிவு
(C-6878)

CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

## சிவப்பு மணல் விற்பனைக்குண்டு

கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் பள்ள நிலங்கள் சீர் செய்வதற்கும் உகந்த சிவப்பு நிற தோட்ட மணல் எம்மிடம் விற்பனைக் குண்டு. யாழ் மாவட்டம் எப்பகுதிக்கும் டிப்பர் மூலம் தங்கள் இடத்திற்கு கொண்டு வந்து பறிக்க முடியும்.
**T.P : 0777906291 / 0779400963**
(C-6881)

## ஆசிரியர் தேவை

பிரபல தனியார் கல்வி நிலையத்திற்கு அனுபவமிக்க ஆசிரியர்கள் தேவை.

**தரம் 06 – 11 வரை**

பாடங்கள் : கணிதம், விஞ்ஞானம், சிங்களம், ICT
இடங்கள் : விசுவமடு ,மல்லாகம்
(இரு இடங்களுக்கும் அருகே இருப்பவர்கள்)

**தொடர்புகளுக்கு :**
**077 448 8222**
(9494)

## தரம் 5 புலமைப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பூமாலை வெளிவந்து விற்பனையாகின்றது..! பூமாலை

# பூமாலை

முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்

# POOMALAI

எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும்

வினாத்தாள்கள் ஏழு பகுதி -1, பகுதி -2 விடைகளோடு
64 பக்க விசேட கையேடு
விலை 525/=

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிகேஷன்
இல. 10-1/5 (No.342, Sea Street - Trust Complex)
முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13.
தொ. பேசி : 077 -6258778
www.facebook.com/unilanka's publication
(C-6901)

விற்பனையாகின்றது
அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்
முதன்மை நிலை - ஒன்று (தரம்-1, தரம்-2)
முதன்மை நிலை - இரண்டு (தரம்-3, தரம்-4)

வெற்றிக்கு வழிகாட்டி தரம்-5
24 மாதிரி வினாத்தாள்கள்
[பகுதி-1, பகுதி-2] விலை - 275/=

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELs
(C-6817)
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## தார் பரல்கள் விற்பனைக்கு
(BITUMEN BARREU, GRADE-80/100)

ROAD வேலைகளுக்கு தேவையான தார் பரல்கள் மற்றும் CARPET ROAD நிர்மாண வேலைகளுக்கான C.R.S-1, C.S.S.-1 M.C-30 (200 Litres Barrcl) பரல்களும் தரச்சான்றுகளுடன் (Certitiecl Test Repovt) மொத்தமாகவும் சில்லறையாகவும் எமது கிளிநொச்சியில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் (BITUMEN YARD) பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு : 070 586 2110**
(C-6899)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-6875)

# தமிழ்விழி பதிப்பகம்




Offset Printing
Digital Banner &Board
Screen Printing
T-Shirt,Mug Printing
(C-6908)

சான்றிதல்கள், வீர,வீராங்கனைகளுக்கான வெற்றி இலக்கங்கள், வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள்,சிறப்புமலர்கள் மற்றும் அனைத்து வகையான அச்சுப்பதிப்புக்களையும் மிகக்குறைந்த விலையில் துல்லியமாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள.....

**இல 05, பழைய கச்சேரி அருகாமை, கண்டி வீதி, கிளிநொச்சி. 021 228 4014,0760218904**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.